# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 43
விலை ரூபாய் 20.00

தீபம்-43
புரட்டாதி இதழ்-2017 ,ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## மகிழ்வுடன் ஆண்டவரது இல்லத்திற்கு போவோம் (தி.பா : 122 : 01)

## ஆயரின் செய்தி



இறை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
எனது அன்பு கலந்த வணக்கங்கள்

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் பல செயல்பாடுகள் நிறைந்த மாதங்களாக அமைந்திருந்தன. இவ்வாண்டின் மூன்று கருப்பொருள்களுள் ஒன்றாகிய தூய மத்தேயு ஆண்டை முன்னிட்டு பலநிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் இந்தியா, தமிழ்நாடு, கோட்டார் மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தை எரோணிமுஸ் குரூஸ் அடிகளின் வருகை சிறப்பான ஒன்றாக அமைந்திருந்தது. விவிலியத்திலே பாண்டித்தியம் பெற்ற அவர் திருச்சி குருமடத்தில் எனது விரிவுரையாளராகவும் இருந்துள்ளார் என்பதில் நான் பெருமையடைகின்றேன். இவர் மறையாசிரியர்களுக்குத் தனியாகவும், பெரியகடை, சாம்பல்தீவு, மூதூர் ஆகிய இடங்களில் பொதுநிலையினருக்கும், மேய்ப்புப்பணி நிலையத்தில் குருக்கள், துறவியருக்கும் விவிலியம் பற்றியும், தூய மத்தேயு நற்செய்தி பற்றியும் உரையாற்றினார். இவற்றை ஒழுங்கு செய்த விவிலியப் பணி இயக்குனர் அருட்தந்தை போல் ரொபின்சன் அடிகளுக்கு எமது பாராட்டுகள்.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.....

## 12 இயேசுவோடு மணி நேரம்

## விசேட நற்கருணை ஆராதனை

இடம் : இறை இரக்கத் திருத்தலம்,
அலஸ்தோட்டம்

காலம் : 14 ஒக்டோபர் 2017 சனிக்கிழமை

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



**திருகோணமலை மறைமாவட்டத்**
**திருச்சபையாக**
**செபத்தில் இணைந்திடுவோம்.**

## மட்டு மறைமாவட்ட கத்தோலிக்கப் பத்திரிகை

### “வெட்டாப்பு” வெள்ளி விழாவுக்கு வாழ்த்துக்கள்





தொடர்ச்சி 03ம் பக்கத்தில்.....

## வெள்ளி விழா நிறைவு

மூதூர் மண்ணின் மைந்தன் அருட்தந்தை நிக்கலஸ் கிறிஸ்ரியன் அருள்வரதன் அவர்கள் தனது குருத்துவப் பணிவாழ்வில் 25வது ஆண்டு நிறைவினை கிறிஸ்து அரசர் ஆலயம் கன்னியாவில் 16.09.2017 அன்று வெகு சிறப்பாக கொண்டாடினார்.











தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.....

## தூய மரியாள் பேராலயத்தில்


### ஜூபிலித் திருப்பலி

### 25.08.2017









தொடர்ச்சி 05ம் பக்கத்தில்......

## திருகோணமலை மறைமாவட்டத்தில்

## விவிலியக் கண்காட்சி - 2017



தொடர்ச்சி 05ம் பக்கத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

புதிய மாதம் தொடங்கிவிட்டது. மீண்டும் உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு.

இம்மாதத்திலே ஆன்மீக நிலைகளை நோக்கும் போது ஐந்தாம் திகதி அன்னைத்தெரேசா சபையினர் தமது விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். 14ம் திகதி திருச்சிலுவைக் கன்னியர் சபை தமது விழாவைக் கொண்டாடுகின்றார்கள். 29ம் திகதி தூய காவல் தூதர் சபையினர் தமது விழாவைக் கொண்டாடுகின்றார்கள். விழாவினைக் கொண்டாடும் அனைத்து கன்னியர் சபையினருக்கும் எமது வாழ்த்துக்கள். தொடர்ந்தும் உங்கள் பணிகள் சிறப்படைய வேண்டுகின்றோம்.

மேலும் இம்மாதம் 24 தேசிய மறைக்கல்வி தினமாகும். மறைக்கல்வி அனைவருக்கும் உரியது. இந்த மேலான நாளில் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

ஆலயத்திருவிழாக்களில் தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், கோ-பாலபுரம் தூய வேளாங்கன்னி ஆலயம், பொது வைத்தியசாலை தூய வேளாங்கன்னி ஆலயம், ஆண்டான்குளம் தூய வேளாங்கன்னி ஆலயம், மூதூர் நாவலடி தூய வேளாங்கன்னி ஆலயம், தூய குவாடலூப்பே அன்னை ஆலயம் இப்பங்குகளில் மக்கள் தமது ஆலய விழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். அனைவருக்கும் இறை ஆசிருடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.

மேலும் இம்மாதத்திலே அருட்பணியாளர்கள் ஜோன்பிள்ளை, G.நிதிதாசன், E.ஜொனத்தன், F.X.ரஜீவன், E.றொகான் பேனாட், யோகராஜா அ.ம.தி, ஜேசுரமேஸ். அ.ம.தி இவர்கள் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள். தொடர்ந்தும் இவர்களின் பணி சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

இம்மாதத்திலே பணியாற்றி மறைந்து போன அருட்பணி G.டொனேசுன், அருட்பணி அருளப்பர் யே.ச. இவர்களை நினைவுகூர்ந்து இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுவோம்

நாட்டின் அரசியல் பல நிலைகளிலே நகர்கின்றது. கட்சிகளிடையே வேறுபட்ட மாறுபட்ட சிந்தனைகள் கட்சிகளுள்ளும் இதே மனநிலைகள். மக்களின் பணியாளர்களாக மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தோம் என்பதை பலரும் மறந்துவிட்டார்கள்.

எனவே நல்லெண்ணங்களும், நல்லுணர்வுகளும் உதயமாகி தீமைகளும், தீயவைகளும் மறைந்து தூயவைகள் உருவாகி நாட்டை உருவாக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுவோம்.

எனவே ஒவ்வொருவரும் தமது ஆன்மீகத்திலே உறுதி பெற்ற நீதி, நேர்மை நிலைகளைக் கடைபிடித்து நாட்டில் நல்லவைகளைக் கண்டடைய வேண்டுவோம் எனக்கூறி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கின்றேன்.

**1ம் பக்கத் தொடர்ச்சி............. வெள்ளிவிழா நிறைவு**

இவ்வாலயமானது அருட்தந்தையின் பங்குத்தளமாகும். அதே நேரம் தனது சொந்த மண்ணான மூதூரில் 17.09.2017 அன்று ஆயரின் தலைமையில் தனது பாண்ட் வாத்தியக் கருவிகள் இசை வழங்க அழைக்கப்பட்டு வெள்ளி விழா நன்றித்திருப்பலியை நிறைவேற்றினார்.

இவ்விரு இடங்களிலும் வருகை தந்த குருக்கள், துறவறத்தார், குடும்பத்தினர், பொதுநிலையினர் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

தொலைபேசி வாயிலாக வாழ்த்துச்செய்தி அனுப்பியவர்களுக்கும், வாழ்த்துமடல் மூலம் தங்கள் வாழ்த்தை தெரிவித்தவர்களுக்கும் நன்றிகள் பல.

அதேநேரம் இவ்விரு இடங்களிலும் வெள்ளிவிழா நிகழ்வு சிறப்புற இடம்பெற உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றிகள்.

அருட்தந்தை அவர்களின் பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்

## குட்டிக்கதை

Fr .Nc

ஒரு ஊரிலே ஒருவர் நன்றாக உடையணிந்து செல்வார். நடை உடை பாவணை எல்லாம் சரியாக இரக்கும். ஆனால் ஒரு பெரிய குறை என்னவென்றால் எதையுமே யோசித்து செயலாற்றுவது இல்லை. இதனால் பெரும் குளறுபடிகள் உண்டாகும். எது எப்படிடியன்றாலும் தலை சரியாகச் செயற்படாவிட்டால் எல்லாமே குளறுபடிதான்.

என்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது உண்மைதானே...

## குருத்துவப்பணிவாழ்வின் பாதையில் 15 வருடங்கள்...

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி க.நிதிதாசன் அடிகளாரும், அருட்தந்தை ஜொனத்தன் அடிகளாரும் தமது குருத்துவ பணிவாழ்வின் 15 ஆண்டுகளின் நிறைவினை 05.09.2017 அன்று கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார்கள். அவர்கள் பணி சிறக்க எங்கள் செபங்களும், வாழ்த்துக்களும்.

எகெட் கரித்தாஸ்
திருகோணமலை

புகைப்படம் 12ம் பக்கத்தில்..................

**1ம் பக்கத் தொடர்ச்சி....... ஆயரின் செய்தி**

செப்டம்பர் மாதம் 17முதல் 24வரை மறைக்கல்வி வாரமாக பிரகடனப்படுத்தி 24ம் திகதி ஞாயிறு தேசிய மறைக்கல்வி தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இதன் சிறப்பம்சமாக இம்மாதம் 30ம் திகதியும் ஒக்டோபர் மாதம் 1ம் திகதியும் தூய மரியாள் பேராலய மண்டபத்தில் மாபெரும் கண்காட்சி நடைபெறுகின்றது. இவ்வருட கருப்பொருளான தூய யோசேப் வாஸ் ஆண்டு, தூய மத்தேயு நற்செய்தி ஆண்டு, குடும்ப நற்பணிகள் ஆண்டு ஆகிய கருப்பொருள்களை உள்ளடக்கியதாக அக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பங்கு மட்டங்களில் மறையாசிரியர்களின் ஒத்துழைப்போடு மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும் பணியாளர்களும் இதை ஒழுங்கு செய்துள்ளார்கள். கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்வதென்பது இலகுவான விடயமல்ல. மிகவும் கடினமானது. ஆயினும் இவ்வாண்டுத் திட்டங்களில் ஒன்றாக இக்கண்காட்சி மறைக்கல்வி நடுநிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி ஞே.ஊ.அருள்வரதன் அடிகளாரையும், நடுநிலைய பணியாளர்களையும், மறையாசிரியர்களையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன். மறைதூதுப் பணிக்கு இதுவும் ஓர் அடையாளம்.

"சென்றுபோதியுங்கள்" என அன்று இயேசு கூறிய வார்த்தைகள் சீடருக்கு மட்டுமா அல்லது இன்று எமக்குமா? திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் இக்கடமையுள்ளது. இதை உணர்ந்து எமது வாக்காலும் வாழ்வாலும் இயேசுவை அறிக்கையிடுவது எமது பணி. மறைக்கல்வி மூலமாக நாம் பல கிறிஸ்தவ விழுமியங்களை நாம் கற்றுக் கொடுக்கிறோம். திருப்பலி, மறையுரை, அருட்சாதனங்களை நிறைவேற்றுதல், ஆலயத் திருவிழா போன்ற நிகழ்வுகள் மூலமாக குருக்கள் விசுவாசிகளுக்குத் தேவையான மறையறிவைக் கொடுக்கின்றனர். மேலாக, ஒருபங்கின் பங்குத் தந்தையே முதன்மை மறையாசிரியராவார். இவ்வாறு ஒரு பங்கின் விசுவாச வளர்ச்சிக்குப் பங்குக்குரு, துறவறத்தவர், மறையாசிரியர்கள், பெற்றோர் என பலரும் பொறுப்பாக உள்ளனர். இப்பொறுப்பையும் பணியையும் நாம் எப்போதும் உணர்ந்து செயல்படுவோம்.

திருச்சிலுவைக் கன்னியர் சகோதரிகளும் அன்னை தெரேசா சபைச் சகோதரிகளும் இம்மாதம் தமது ஸ்தாபகர்களின் பெருவிழாவைக் கொண்டாடினார்கள். இவர்களை நாம் வாழ்த்துகின்றோம். இவர்களது பணி மேலும் வளர செபிப்போம்.

இது எமக்கு யூபிலி ஆண்டு. எமது திருகோணமலை மறைமாவட்டம் தனி மறைமாவட்டமாக உருவாகி 125 வருடங்கள் நிறைவடைகின்றன (1893 ~2018). ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி யூபிலி ஆண்டை நாம் முறையாகத் தொடங்கி வைத்தோம். யூபிலி ஆண்டிற்கான முக்கிய நிகழ்வாக நாம் சில விடயங்களை தீர்மானித்துள்ளோம்.

1.யூபிலி ஆண்டிற்கான விசேட வெளியீடு. இது எமது மறைமாவட்டம், பங்குகள், குருக்கள் பற்றிய பல விடயங்களைக் கொண்டிருக்கும். சரித்திர நூலாகவும் இது அமையும். அருட்தந்தை A.A. நவரெட்ணம் இதற்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றுகின்றார். அவருக்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுப்போம்.

2.பழைய தூய அந்தோனியார் பாடசாலையில் அமைந்துள்ள கேட்போர் கூடம் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. அம்மண்டபத்தை நாம் முறையாக நவம்பர் மாதம் 25ம் திகதி திறந்து வைக்கவுள்ளோம். எமது யூபிலி ஆண்டின் நினைவாக இம்மண்டபத்திற்கு "யூபிலிமண்டபம்" எனும் பெயரைச் சூட்டவுள்ளோம்.

3.சிறைப்பட்டோருக்கு விடுதலை

நமதாண்டவர் இயேசு தொழுகைக்கூடத்தில் இறைவாக்கினர் எசாயாவின் ஏட்டுச் சுருளை எடுத்து வாசித்த பகுதியில் 'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலையடைவர்......" என்று குறிப்பிடுகின்றார். (லூக் 4:18). சிறைப்பட்டோருக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பது யூபிலி ஆண்டு செயல்பாடுகளில் முக்கியமானது.

எமது நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் அரசியல் கைதிகள் எனும் பெயரில் பலர் விசாரணைகள் இல்லாமல் பலவருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மறைமாவட்ட திருச்சபையாக நாம் நம்பிக்கையோடு மக்களிடமிருந்து கையெழுத்துக்கள் சேகரித்து எமது நாட்டின் ஜனாதிபதிக்குக் கையளிக்கும் முயற்சியைமேற்கொள்கின்றோம். இதற்குஅனைவரதுஒத்துழைப்பும் எமக்குத் தேவையாகவுள்ளது. மேலும் விபரங்களை பங்குத் தந்தையர் மூலமாக உங்களுக்குஅறியத் தருவோம். இம்முயற்சி வெற்றியளிக்க செபிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

ஒக்டோபர் மாதம் 18ம் திகதி (விடுமுறை தினம்) ஒரு மில்லியன் குழந்தைகள் அமைதிக்காகவும் ஒற்றுமைக்காகவும் செபமாலை செபிப்பார்கள். சர்வதேச ரீதியல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சிக்கு நாமும் முழு மறைமாவட்டமாக எமது பங்களிப்பைச் செய்வோம். எனவே அன்றைய தினம் காலை 8.45க்கு எல்லா ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்டும். மக்கள் தமது ஆலயங்களிலே கூடுவார்கள். முடியாதவர்கள் தமது இல்லங்களில் காலை 9.00 மணிக்கு உலக சமாதானத்திற்காகவும் ஒற்றுமைக்காகவும் செபமாலை செபிப்பார்கள். மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும், துறவற இல்லங்களிலும், வீடுகளிலும் ஒரே தினத்தில் (ஒக்டோபர் 18 புதன்), ஒரே நேரத்தில் (காலை 9.00 மணி) ஒரே நோக்கத்திற்காக (உலக சமாதானம், உலக ஒற்றுமை) செபமாலை செபிக்கப்படும். நம்பிக்கையோடு செபிப்போம், நல்லவை நடக்கும்.

எமது மறைமாவட்டம் மேலும் ஆன்மீகத்திலும், கல்வியிலும் சமூகப் பணியிலும் தொடர்ந்து வளர எமது பங்களிப்பை அர்ப்பணிப்போடு கொடுப்போம்.

ஆண்டவர் எப்போதும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் தமது
செட்டையின்கீழ் வைத்துப் பாதுகாப்பாராக.

கிறிஸ்துவின் அன்பில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

# மாதம் ஒரு புதுமை



**நற்கருணைப் புதுமை**

8ம் நூற்றாண்டில் இத்தாலியில் லான்சியானோ எனுமிடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய குருவுக்கு வசீகர வார்த்தையிலும் அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாக மாறுவதிலும் சந்தேகம் ஏற்பட்டது. அத்திருப்பலியின்போது அவரது சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் அப்பமும் இரசமும் சதையாகவும் இரத்தமாகவும் மாறியதை உணர்ந்தார்.



திருப்பலிக்கு வருகை தந்த மக்களிடமும் இதைக் காட்டினார். இவ்விடயம் ஆயருக்குத் தெரிவிக்கப்பட பூரண ஆராய்ச்சிக்கு ஆயர் பணித்தார். ஆராய்ச்சியின் முடிவில் இது ஓர் நற்கருணைப் புதுமை என திருச்சபை பிரகடனம் செய்தது. இன்றும் இவை பாதுகாப்பாக லான்சியானோவில் உள்ள ஆலயத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மக்களும் திரளாக வந்து மரியாதை செலுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியைக்காணவே
Fr NC

- ❖ கவிதை வரிகளை
- ❖ சரியாக வடிவமையுங்கள்
- ❖ இதோ கவிதை வரிகள்

- ☞ கலவரமும் ஆரவாரங்கள்
- ☞ கட்டவிழ்ந்து கலையும்போது
- ☞ அமைதியை எங்கே காண்போமோ
- ☞ ஒவ்வொரு மனமும் அமைதியைத் தேட
- ☞ உண்மையில் அமைதி உதயமாகுமே
- ☞ வேண்டுவோம் இறைவனை அமைதியைக் காணவே
- ☞ அமைதியைக் காண எங்கும்
- ☞ ஆவலாய்த் தேடுகின்றோம்
- ☞ அமைதியே நிலை கொள்ளாமல்
- ☞ கலைந்தது மறையும் போது

போட்டியில் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

- ❖ 1ம் பரிசு 500/-
- ❖ 2ம் பரிசு 300/-
- ❖ 3ம் பரிசு 200/-


முடிவுத்திகதி : 25.10.2017

தொடர் - 07

## நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



### மரியாதை



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

சொல்லிலும் செயலிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய பண்பு மரியாதையாகும் கீழைத்தேய குரு – சிஷ்ய கல்விமுறைக்குள் இப் பண்பு பெரிதாக வலியுறுத்தப்படவில்லை என்று கூறலாம். ஆசிய கலாசாரத்துக்குள் வயதில் இளையோருக்கு மரியாதை கொடுத்தல் என்பது மேலைத்தேய கலாசாரத்தோடு ஒப்பிடும் போது குறைவாகவே இருப்பதுபோல் தோன்றுகின்றது. அதிலும் ஆசிரியர் மாணவரை மரியாதையாக விழித்தல், நடத்துதல் என்பது குறைவாகவே இருக்கின்றது. ஆசிரியர் அதிகாரத்திலும், கடுந்தொனியிலும் பேசுபவராகவே பொதுவாக தோற்றமளிப்பார். இதற்கு விதிவிலக்கான ஆசிரியர் சிலர் இருக்கலாம். அவர்களை பற்றி நாம் இங்கு பேசவில்லை.

ஆங்கிலகல்வி முறைக்கூடாக பயிற்றப்பட்டு வந்தவர்கள் மரியாதைப்பண்பை ஓரளவு உள்வாங்கி இருக்கின்றனர் எனலாம். ஆங்கிலமொழிப் பிரயோகத்திலே யேமரியாதைப் பண்புபின்னிப்பிணைந்திருப்பதைஅவதானிக்கமுடியும். "May I come in?""Can I borrow your pencil?""Can I help you?""Excuse me.""I am Sorry.""I beg your pardon.""You are welcome" போன்ற மரியாதைப் பண்புள்ள வாக்கியங்கள் கலாசாரத்திற்கூடாகவே மேற்கிளம்புகின்றன. இவ் வாக்கியங்களின் தளுவலான தமிழ் வாக்கியங்கள் உள்ள போதிலும் அதை தமிழ் கலாசாரத்தினூடாக முகிழ்த்தன என கொள்ளல் முடியாது. இதன் காரணமாக ஆசிரிய – மாணவ இடைவினையில் குறிப்பாக பேச்சுவழக்கில் இறுக்கமான தன்மை காணப்படுவதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

மேற்கு நாடுகளில் கல்விக் கொள்கையின் செல்வாக்காலும், பொதுவான நடத்தையினாலும், பேச்சிலும், ஆசிரியமாணவரின் இடைவினையின் போதும் மரியாதை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. கடிந்து கொள்கையிலும், மரியாதை வெளிப்பட வேண்டும், கண்டிப்பதிலும் அன்பு புலப்பட வேண்டும். பல்வேறு குடும்பப் பின்னணியில் இருந்துவரும் மாணவர் நடத்தையிலும், பேச்சிலும், மனோபாவத்திலும் மரியாதையை கற்றுக் கொள்ள ஆசிரியர் முன்மாதிரியாக இருக்க வேண்டும். காந்தி அடிகளாரின் பின்வரும் கூற்றை ஒவ்வொரு ஆசிரியரும் உள்வாங்கினால் மரியாதைப் பண்பு இயல்பாகவே மேலோங்கும்.

எமது (ஆசிரியரது) வாழ்வியலுக்குள் மாணவரொருவர் மிக முக்கியமான விருந்தாளியாவார். அவர் (மாணவர்) எம்மில் தங்கியிருக்கவில்லை நாம் (ஆசிரியர்) அவரில் தங்கியிருக்கின்றோம். எமது வேலைகளின் மத்தியில் அவர் ஒரு இடையூறல்ல. மாறாக எமது பணியின் நோக்கமே அவர்தான். எமது பணியில் அவர் வெளியாளல்ல மாறாக ஒருபகுதி. அவருக்கு பணிசெய்வதன் மூலம் நாம் சலுகையேதும் புரியவில்லை: அவருக்கு சேவை செய்ய எமக்கொரு சலுகையை வழங்குகின்றார்.

இதே கருத்தை இரத்தினச் சுருக்கமாக "கல்வியின் இரகசியம் மாணவரை மதிப்பதில் தங்கியுள்ளது" என Herbert Spencer கூறுகின்றார்.

தொடரும் .......

## இறைபணியில் 15 வருடமதை பூர்த்தி செய்த அருட்பணியாளர்கள்

Fr. E.P.ஜொனத்தன்
Fr .S.S. ஜோன்பிள்ளை
Fr . K. தீத்தாசன்
Fr . F. X. ரஜீவன்




இறைதந்தையால் வயலில் விதைக்கப்பட்டது
கோடி விதைகள் – அதில்
நல்நிலத்தில் விழுந்த நல் விதைகள்
நீங்கள் அருட்தந்தையர்களே
அவர்தம் பணிக்கு ஆசையாய்
அழைத்த அன்பர்கள் நீங்கள்
இறைபணியில் 15 ஆண்டுகள் – இறை
பாதையில் பயணித்த நல் ஊழியர்கள்
15 வருடங்களும் என்ன பசுமையானவையாய் இருந்ததா?
பாரங்களும், காயங்களும். கஸ்டங்களும் நிறைந்த
சிலுவைப்பயணம் – சிறப்பாய் கடந்தீர்கள்
15 வருடங்களாக தொடர்கிறீர்கள் ஊழியத்தை
இன்றும் என்றும் அவர் துணை கொண்டு
இன்னும் பல வருடங்கள் உங்கள் பணி
இறைமக்களுக்கு நிறைவாய்க் கிடைக்க வேண்டி
இறையாசீரும் வாழ்த்துக்களும்,
செபங்களும் நிறைவாய் !

ஆக்கம்: ஷெரீன் வில்லியம்ஸ்

**01ம் பக்கத் தொடர்ச்சி ...... மட்டு மறைமாவட்ட கத்தோலிக்கப் பத்திரிகை...**

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்கப் பத்திரிகையான 'வெட்டாப்பு' தனது 25வது வருடத்தில் கால் பதித்துள்ளது. இப்பத்திரிகையானது இதுவரை காலமும் தனது ஆக்கங்களால் வாசகர்களைத் தன் பக்கம் இழுத்துள்ளது பாராட்டத் தக்க விடயமாகும். இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தின் மட்டக்களப்பு மண்ணின் கத்தோலிக்க பத்திரிகையான 'வெட்டாப்பு' இன்னும் பல நூற்றாண்டுகள் கடக்க வேண்டுமெனவும், ஆரம்பம் முதல் இன்று வரை வழிநடத்திச் சென்ற ஆசிரியர்களுக்கும், நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் திருமலை மண்ணின் பத்திரிகையான 'திருமலைத்தீபம்' வாழ்த்துகின்றது.







## திருத்தந்தை தின பங்குகளின் சேகரிப்பு - 2017

| | |
|---|---|
| தூய வார்து அன்னை ஆலயம் | ~ |
| தூய மரியாள் பேராலயம் | ~ |
| இறை இரக்கத் திருத்தலம், அலஸ்தோட்டம் | ~ |
| தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் | ~ |
| குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை | ~ |
| தூய வனத்து அந்தோனியார் ஆலயம். செல்வநாயகபுரம் | ~ |
| தூய குவாடலூப்பே அன்னை ஆலயம் | ~ |
| தூய சூசையப்பர் ஆலயம், நிலாவெளி | 4,720.00 |
| தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு | ~ |
| தூய பற்றிமா மாதா ஆலயம், தம்பலகாமம் | 1,500.00 |
| திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம் | ~ |
| தூய அந்தோனியார் ஆலயம், சீனக்குடா | ~ |
| கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா | ~ |
| தூய சதாசகாய அன்னை ஆலயம், கந்தளாய் | ~ |
| தூய செபமாலை மாதா ஆலயம், குச்சவெளி | ~ |
| | 6. 220.00 |

தகவல் : அருட்தந்தை டே. அன்ரு ஸ்டீபன்,
நிதிப்பொறுப்பாளர்
ஆயர் இல்லம்
உவர்மலை,
திருகோணமலை


## சுதேச குருக்கள் தினம் - 2017

| | | |
|---|---|---|
| 01. | தூய வார்து அன்னை ஆலயம் | 41,350.00 |
| 02. | தூய மரியாள் பேராலயம் | 27,413.00 |
| 03. | இறை இரக்கத் திருத்தலம், அலஸ்தோட்டம் | 16,900.00 |
| 04. | குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை | 13,960.00 |
| 05. | தூய குவாடலூப்பே அன்னை ஆலயம் | 12,270.00 |
| 06. | தூய சூசையப்பர் ஆலயம், நிலாவெளி | 9,860.00 |
| 07. | தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு | 7,000.00 |
| 08. | தூய பற்றிமா மாதா ஆலயம் , தம்பலகாமம் | 6,000.00 |
| 09. | திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம் | 6,000.00 |
| 10. | கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா | 3,000.00 |
| 11. | தூய சதாசகாய அன்னை ஆலயம், கந்தளாய் | 3,000.00 |
| 12. | தூய செபமாலை மாதா ஆலயம், குச்சவெளி | 1,000.00 |
| 13. | தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் | ~ |
| 14. | தூய அந்தோனியார் ஆலயம், சீனக்குடா | ~ |
| 15. | தூய வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரம் | ~ |
| | மொத்தொகை | 147,753.00 |

தகவல் : அருட்தந்தை டே. அன்ரு ஸ்டீபன்,
நிதிப்பொறுப்பாளர்
ஆயர் இல்லம்
உவர்மலை,
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப மறைக்கல்வியும் இக்காலத் தேவையும்



**முன்னுரை**

அவர் ஓர் அருள்பணியாளர். 25 ஆண்டுகளுக்கு மேலாக குருத்துவக் கல்லூரியில் இறையியல் கற்றுக்கொடுத்த பேராசிரியர் ஓய்வு பெறுகின்ற தனது கடைசி காலத்தில் மறைமாவட்டத்தின் கடைநிலை பங்குத்தளத்தில் பணிபுரிகின்றார். அவரது எளிய வாழ்க்கையைப் பார்த்து மக்கள் வியந்து பேசுகின்றார்கள். ஒருமுறை தனது விசுவாச வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்ற போது அவர் சொன்னது, ' நான் சிறுவயதில் கத்தோலிக்கப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைப் புகழ்பெற்ற கல்லூரியில் பயின்றேன். ஏழு வருடங்கள் குருத்துவப் பயிற்சியை குருத்துவக் கல்லூரியில் இறையியலைக் கற்றுக் கொடுத்தேன். இத்தளங்கள் எனக்கு ஏராளமான விசுவாசப்பயிற்சிகளைக் கொடுத்தன. பல விசுவாசக் கோட்பாடுகளையும், இறையியலையும் கற்றேன். எனது அறிவு பரந்து விரிந்தது. ஆனால் கண்களை மூடி இன்று எனது விசுவாச வாழக்கையைப் பார்க்கின்ற போது, மேற்சொன்னவை அனைத்தும் என் நினைவிற்கு வரவில்லை. மாறாக சிறுவயதில் என் தாய் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்த சிறு செபங்களும், குடும்பத்தில் எனக்கு கிடைத்த இறையனுபவமுமே என்னை இன்று இப்படி வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. எனக்கு உடல்நிலை சரியில்லாத தருணங்களிலும். குடும்பப் பிரச்சினை நேரங்களிலும் எனது தாய் இரவு நேரங்களில் மண்டியிட்டுத் தனியாக செபிப்பார். படுக்கையில் படுத்துக் கொண்டு அதை நான் பார்ப்பேன். கண்களில் கண்ணீர் வரும் விடியற்காலையில் படுக்கையில் இருந்து எழுகின்ற போது முழங்கால்படியிட்டு செபிப்பார். இவைதான் நான் எங்கு சென்றாலும் திவ்விய நற்கருணை முன்பு முழங்கால் படியிட்டு செபிக்கும் பழக்கத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தன. செபத்தின் வலிமையைப் புரிய வைத்தது.

வயது முதிர்ந்த நிலையிலும் என் தந்தை திருப்பலியில் பங்கேற்கச் செல்வார். மற்றவர்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. திருப்பலியில் பங்கேற்றுத் தினமும் திவ்விய நற்கருணை உட்கொண்டால் கிடைக்கும் பலன்களை என்னிடத்தில் விவரிப்பார். இவைதான் சிறுவயதில் நானும் என் தந்தையோடு கைபிடித்து திருப்பலி செல்வதற்கும் மிகச் சிறுவனாகப் பணி செய்வதற்கும், பிற்காலத்தில் குழுவாகத் திருப்பலியை மிகுந்த தயாரிப்போடு கொண்டாடுவதற்கும் துணைபுரிந்தன. நான் படித்த பள்ளி, கல்லூரி, குருமடம் எனக்கு விசுவாசப் பயிற்சியை கொடுத்தது. ஆனால் உயிருள்ள விசுவாசத்தை என் குடும்பத்தில் எனது பெற்றோர்களிடத்தில்தான் நான் கற்றுக் கொண்டேன் என்று தனது அனுபவப் பகிர்வை முடித்தார்.

**குடும்பம் ~ ஒரு குட்டித்திருஅவை**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்பத்தை ஒரு குட்டித் திருஅவை என்று அழைக்கிறது. காரணம். ஒவ்வொரு குடும்பமும் திருஅவையின் சாயலாகவும், அதன் பிரதிபலிப்பாகவும் இருக்கிறது. திருஅவையின் ஒட்டுமொத்த செயல்பாடுகளும் குறிப்பாக நற்செய்தி அறிவிப்பு. மறைக்கல்வி, இறைவேண்டல், பகிரும் வாழ்வு போன்றவை குடும்பத்திலும் நடக்கிறது. மேலும் ஒரு குழந்தைக்கு விசுவாசத்தை கற்றுக் கொடுக்கும் முதல் பாடசாலையாக குடும்பம் பெற்றோர்கள் தங்கள் செயல்களாலும் முன்மாதிரிகையாலும் குழந்தைக்கு விசுவாசத்தைப் போதிக்கும் முதல் ஆசான்களாக இருக்கிறார்கள். நற்செய்தி மதிப்பீடுகள் அங்கே விதைக்கப்படுகின்றது. தவறு செய்யும்போது மன்னிக்கவும். தன்னிடம் இருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் குடும்பத்தில்தான் ஒரு குழந்தை கற்றுக் கொள்கிறது.

மேலும் நம் கடவுள்: தந்தை, மகன், தூய ஆவி என்று மூவொரு குடும்பமாக வாழுகின்ற கடவுள்: படைப்பின் தொடக்கத்திலேயே ஆதாம் ~ ஏவாள் குடும்பத்தைப் படைத்தார். தனது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற ஆபிரகாமின் குடும்பத்தை அழைத்தார். தனக்கு வேண்டியவர்களை அரசராக. இறைவாக்கினராக குடும்பத்திலிருந்து தான் அழைத்தார். எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை ஒரு குடும்பமாகத் தான் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றார். இறுதியாகத் தனது ஒரே பேறான மகனை குடும்பத்தில்தான் பிறக்கச் செய்தார். குடும்பத்தில் தான் புனிதம் பிறக்கிறது. மனிதம் ஊற்றெடுக்கிறது.

**இன்றைய குடும்பங்கள்**

மாறிவரும் நவீன உலகில் இன்றைய குடும்பங்கள் பல்முனை தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன. நுகர்வு கலாச்சாரப் பிடியும், பணத்தின் மோகமும், போலிதனிமனித சுதந்திரமும், கணவன் மனைவிக்கிடையே பிரமாணிக்கமின்மையும், இதனால் ஏற்படும் திருமண முறிவும், கருக்கலைப்பும் குடும்பத்தின் புனிதத்தையும், மாண்பினையும் சீர்குலைத்து வருகின்றன. ' நவீன கலாச்சாரம்' என்ற பெயரில் சொந்த பந்தங்களை வெளியே அனுப்பி விட்டுத் தனி குடும்பங்களாக உறவின்றி இன்றைய குடும்பங்கள் தவிக்கின்றன. ஒரு காலத்தில் குழந்தைகளின் மழலை சத்தமும், தாய்மார்களின் கொஞ்சல் சத்தமும் வீடுகளில் கேட்டன. இன்று 24மணிநேரமும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறது. அன்று தாத்தா, பாட்டிகள் நீதிநெறிக் கதைகளைச் சொல்லி குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள். இன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் கதைகள் சொல்லுகின்றன. அவைகள் பாலியல் உணர்வுகளைத் தூண்டுகின்ற, வக்கிர உணர்வுகளைத் தட்டியெழுப்புகின்ற நிகழ்வுகளாக உள்ளன. இந்நிலையில் கத்தோலிக்க குடும்பங்களில் அன்றிருந்த குடும்பச் செபமாலையும் குடும்ப விவிலிய வாசிப்பும், மற்ற கத்தோலிக்க பழக்க வழக்கங்களும் தொலைக்காட்சித் தொடர்களில் தொலைந்து போய்விட்டன. சுருங்கச் சொல்லின், இன்றைய குடும்பங்கள் வாழ்க்கைநெறியைத் தொலைத்து, திக்குத் தெரியாமல் எங்கேயோ சென்று கொண்டிருக்கின்றன.

**குடும்ப மறைக்கல்வி ~ காலத்தின் கட்டாயம்**

குடும்பத்தின் புனிதத்தையும், மாண்பையும் மீண்டும் குடும்பங்களிலே நிலைநாட்டவும், கத்தோலிக்க விசுவாசத்தை ஆழமாக வேரூன்றவும் குடும்ப மறைக்கல்வி இன்று காலத்தின் கட்டாயமாகின்றது. குடும்ப மறைக்கல்வி என்பது ஒரு குடும்பத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லா உறுப்பினர்களும் கத்தோலிக்க விசுவாசத்தை அறிந்து கொள்வதிலும், அவற்றில் வளர்வதிலும் ஒன்றாக சேர்ந்து எடுத்துக் கொள்கின்ற தொடர்பயிற்சியாகும். இத்தொடர் பயிற்சியில் பெற்றோர்களும், பங்குத்தளமும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன.

பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு முதல் நற்செய்தியாளர்களாய்த் திகழ்கிறார்கள். அவர்களை விசுவாசத்தில் வளர்ப்பது அவர்களது தலையாய கடமையாகிறது. பங்குத்தளம் அவ்விசுவாசத்தை வளர்க்கத் தேவையான சூழலையும், பண்படுத்தத் தொடர்பயிற்சியையும் அளிக்கிறது. இவ்விருவரும் குடும்ப மறைக்கல்வியை வீரியமுள்ள விதத்தில் செயல்படுத்த கீழ்க்கண்ட பரிந்துரைகளைப் பின்பற்றலாம்.

**குடும்பத்தில்..........**

1. பெற்றோர்கள் தங்கள் நம்பிக்கை அணுகுமுறைகளை பிள்ளைகளிடத்தில் பகிர்ந்து. இறைவனின் பராமரிப்பை உணர்த்த வேண்டும்.
2. குடும்பச் செபமாலையைத் தினமும் குடும்பத்தோடு சேர்ந்து செபிக்க வேண்டும்.
3. உணவு உண்பதற்கு முன்பும், பின்பும், இரவில் படுக்கச் செல்வதற்கு முன்பும், காலையில் எழுந்த பின்பும், எல்லா வேலையும் தொடங்குவதற்கு முன்பும் இறைவேண்டல் செய்யவேண்டும் என்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
4. உணவு உண்ணும்போது குடும்பத்தோடு ஒன்றாகச் சேர்ந்து உண்ணப் பழக வேண்டும்.
5. இரவு உணவுக்கு முன்பு விவிலியத்தின் ஒரு பகுதியை வாசித்து அதன் கருத்துக்களை விவாதிக்க வேண்டும்.
6. இரவு நேரங்களில் குழந்தைகளுக்கு விவிலியக் கதைகளைச் சொல்லி உறங்க வைக்க வேண்டும்.
7. குடும்ப நிகழ்வுகளை பிறந்தநாள், ஆண்டு விழாக்கள், சுப நிகழ்வுகள், அருளடையாக் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளைக் குடும்பத்தாரோடு சேர்ந்து கொண்டாட வேண்டும். அவ்வேளைகளில் குடும்ப வரலாற்றைக் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும்.
8. குடும்பத்தோடு ஞாயிறு திருப்பலியில் பங்குபெற வேண்டும். பெற்றோர்கள் அதற்கு ஊக்கம் கொடுத்து. முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.
9. ஒவ்வோர் உறுப்பினரும் ஏதாவது ஒரு பங்கு (ஆலய) பணியில் ஈடுபட வேண்டும். (உம். பீடச் சிறுவர், வாசகம் வாசிப்பவர், பாடகற்குழு, பக்தி சபைகள்....) அந்த அனுபவங்களைக் குடும்பத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
10. பிள்ளைகளுக்கு உண்டியலில் காணிக்கை செலுத்தப் பயிற்சி கொடுக்க வேண்டும். இது சிறுவயதிலேயே பகிரும் பண்பில் வளர உதவிபுரியும்.

**பங்குத்தளத்தில் ..........**

குடும்ப மறைக்கல்வி என்பது குடும்பங்களினால் மட்டும் சாத்தியமானது. அவைகளை ஊக்குவித்து, பயிற்றுவிக்க பங்குத்தளம் முக்கிய பங்கை ஆற்றுகின்றது.

1. பங்குப் பணியாளர் அடிக்கடிக் குடும்பங்களைச் சந்தித்து அவர்களது வாழ்க்கை முறைகளைக் கேட்க வேண்டும். உடனடி மேய்ப்புப்பணித் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.
2. பங்களவிலே குடும்ப நலப்பணிக்குழுவை (Family Apostolate Commision) உருவாக்கி உடைந்து போன குடும்பங்களைச் சந்தித்து சரிசெய்ய வேண்டும்.
3. வயது வந்தப் பெரியவர்களுக்கு (Adults) சீரான முறையில் விவிலிய இறையியல் கருத்தரங்குகளை நடத்தவேண்டும்.
4. அன்பியங்களின் மூலம் குடும்ப மறைக்கல்வியைக் கற்பிக்க, அன்பியங்களை உயிரூட்டமுள்ளதாக வைத்திருக்க வேண்டும்.
5. குடும்பங்களில் பக்தி முயற்சிகளைத் திருஇருதய ஆண்டவர் திருப்படம் நிறுவுதல், குடும்ப ஜெபங்கள், வீடு மந்திரிப்பு, விவிலிய வாசிப்பு, குடும்ப செபமாலை போன்ற நிகழ்வுகளின் முக்கியத்துவத்தை மறையுரைகளிலோ, வீடு சந்திப்பிலோ விளக்கிச் சொல்ல வேண்டும்.
6. குடும்பங்களில் மூடப்பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகிறதா என்பதைப் பரிசோதித்து முறையான மறைக்கல்வியை வழங்க வேண்டும்.

**முடிவுரை**

குடும்பம் நற்பண்பை விதைக்கும் ஒரு நாற்றங்கால்: செடியாக்கும் ஒரு தோட்டம்: மரமாக்கும் ஒரு தோப்பு. அது கற்களால் கட்டப்பட்ட கட்டடம் இல்லை. கணவன் மனைவி, பிள்ளைகள் உறவினர், சுற்றத்தார் என்ற உறவுகளால் கட்டப்பட்ட ஒரு கோவில் அங்கே இறைவன் குடிகொண்டிருக்கிறார். புனிதம் இழையோடிக் கொண்டிருக்கிறது. இறைவன் உறையும் இவ்வில்லத்தை, புனிதம் வீசும் இச்சூழலைக் கெடுக்கும் தீய காரணிகளுக்கு ஆட்படாமல் இருக்க நம் விசுவாசம் கட்டிக்காக்கப்பட வேண்டும். ஆழப்படுத்தப்பட வேண்டும். அதற்கு குடும்ப மறைக்கல்வி உற்றத் துணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நன்றி ~ தோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைநாள் ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கௌரவ கிரிக்கட் சுற்றுப்போட்டிபாட்டி

மறைமாவட்ட பீடப்பணியாளர்களுக்கிடையே கடந்த ஆவணி மாதம் 18ம் திகதி பாலையூற்று Quick 7 மைதானத்தில் இடம் பெற்றது. 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் நிலாவெளி, சிலுவை மலை, சாம்பல் தீவு, இறையிரக்கம், செல்வநாயகபுரம், குவாடலூப்பே, பேராலயம், உவர்மலை, அன்புவழிபுரம், பாலையூற்று, ஆண்டாங்குளம், சீனக்குடா, இலிங்கநகர் போன்ற அணிகள் பங்குபற்றின. முன்னைநாள் ஆயர் வண. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வெற்றுக்கிண்ணத்தை பாலையூற்று பங்கு பீடப்பணியாளர்கள் கைப்பற்றினார்கள். 2ம் இடத்தை நிலாவெளி பங்கு பீடப்பணியாளர்கள் பெற்றுக்கொண்டார்கள். போட்டியில் கலந்துகொண்ட எல்லா அணிகளுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இடம்பெற்ற இந் நிகழ்வில் மறைமாவட்ட ஆயர் வண. நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும் முன்னைநாள் ஆயர். வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

தகவல்
அலை ஓசை கலைத்தொடர்பகம்

புகைப்படம் 12ம் பக்கத்தில்..............

01ம் பக்கத் தொடர்ச்சி ............. **திருகோணமலை மறைமாவட்டத்தில்....**

திருகோணமலை மறைமாவட்டத்தில் திருமறைக்கல்வி நடுநிலையத்தால் இவ்வாண்டின் கருப்பொருளான தூய யோசேப் வாஸ், தூய மத்தேயு, குடும்ப அருட்பணி ஆகிய தலைப்புக்களில் விவிலிய கண்காட்சி புரட்டாதி 30ம் திகதியும், ஐப்பசி 01ம் திகதியும் இரு நாட்கள் நடைபெற்றது.

இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக எமது மறைமாவட்ட ஆயர் அதி. வந். கி. நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களால் தூய யோசேப் வாசும், கௌரவ விருந்தினராக வருகை தந்த மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ரி. கிங்ஸ்லி றொபட் அவர்களால் குடும்ப அருட்பணியும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட எகெட் கரித்தாஸ் இயக்குனர் அருட்தந்தை க. நிதிதாசன் அவர்களால் தூய மத்தேயு கண்காட்சிகள் திறந்து வைக்கப்பட்டன.

இக்கண்காட்சிக்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், மறையாசிரியர்கள் மறைக்கல்வி மாணவர்கள், இறைமக்கள் வந்து பார்வையிட்டுச் சென்றனர். இக்கண்காட்சியானது தரமானதும். ஆக்கபூர்வமானதுமாக, பயன்மிக்கதுமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

விவிலியக் கண்காட்சியின் தொடக்கத்தில் எமது மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனருக்கு வெள்ளிவிழா சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கணகாட்சியானது சிறப்பாக அமைய ஒத்துழைப்புக்கள் வழங்கிய ஒவ்வொரு நல் உள்ளங்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## உண்மையுள்ளவர்களாய் வாழ்வோம்

அனனியா என்னும் பெயருள்ள ஒருவன் இருந்தான். அவன் தன் மனைவி சப்பீராவுடன் சேர்ந்து தன்னுடைய நிலத்தை விற்றான். விற்ற தொகையில் ஒரு பகுதியைத் தன் மனைவி அறியத் தனக்கென்று வைத்துக்கொண்டு, மறுபகுதியைத் திருத்தூதரின் காலடியில் கொண்டு வந்து வைத்தான். அப்பொழுது பேதுரு " அனனியா நீ நிலத்தை விற்ற தொகையில் ஒரு பகுதியை உனக்கென்று வைத்துக் கொண்டு தூய ஆவியாரிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆட்கொண்டதேன்? அது விற்கப்படுவதற்கு முன்பு உன்னுடையதாகத்தானே இருந்தது? அதை விற்ற பின்பும் அது உன்னுடைய உரிமையாகத்தானே இருந்தது? பின்பு ஏன் நீ இச்செயலுக்கு உன் உள்ளத்தில் இடமளித்தாய்? நீ மனிதரிடமல்ல, கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்'' என்று கூறினார். அவர் கூறியதைக் கேட்டதும் அனனியா கீழே விழுந்து உயிர்விட்டான். இதைக் கேள்வியுற்ற அனைவரையும் பேரச்சம் ஆட்கொண்டது. இளைஞர்கள் எழுந்து வந்து அவனைத்துணியால் மூடிச் சுமந்து கொண்டு போய் அடக்கம் செய்தார்கள். ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்குப் பின் அவன் மனைவி உள்ளே வந்தாள். நிகழ்ந்தது எதுவும் அவளுக்குத் தெரியாது. பேதுரு அவளைப் பார்த்து, நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? சொல்'' என்று கேட்க அவள் ஆம், இவ்வளவுக்குத்தான் விற்றோம்'' என்று பதிலளித்தாள். மீண்டும் பேதுரு அவளைப் பார்த்து, "தூய ஆவியாரைச் சோதிக்க நீங்கள் உடன்பட்டதேன்? இதோ ! உன் கணவனை அடக்கம் செய்தவர்கள் கதவருகில் வந்து விட்டார்கள். அவர்கள் உன்னையும் வெளியே சுமந்து செல்வார்கள்'' என்றார். உடனே அவள் அவர் காலடியில் விழுந்து உயிர்விட்டாள். இளைஞர்கள் உள்ளே வந்து அவள் இறந்து கிடப்பதைக் கண்டு வெளியே சுமந்து கொண்டு போய் அவள் கணவனுக்கு அருகில் அடக்கம் செய்தார்கள். திருச்சபையார் யாவரையும், இதைக் கேள்வியுற்ற யாவரையுமே பேரச்சம் ஆட்கொண்டது. (தி.ப : 5: 1~ 11)

ஆக்கம் : ரெ. மேரி ரொஷானி
இலிங்கநகர்.

01ம் பக்கத் தொடர்ச்சி.......... **தூய மரியாள் பேராலயத்தில் ஜூபிலித் திருப்பலி........**

- 25.08.1893ம் ஆண்டு சிங்கராயர் பாப்பரசரால் திருகோணமலை எனும் புதிய மறை மாவட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.
- புதிய மறைமாவட்டம் உருவாக்கப்படும் வரையிலும் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயரின் பரிபாலணையின் கீழ் இயங்கி வந்தது.
- புதிய மறைமாவட்டத்தின் நிர்வாக பிரதேசங்களாக கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மட்டக்களப்பு (அம்பாறை) ஆகிய மாவட்டங்களும், வடமத்திய மாகாணத்தின் பொலனறுவை மாவட்டமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.
- 23.10.1967ம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்டமானது திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்டமென பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திருகோணமலை மறைமாவட்டமானது தமிழ், சிங்கள மொழி பேசுகின்ற மக்களையும், இந்து பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்களை அதிகளவில் பின்பற்றகின்ற மக்களையும் கொண்டதாகும்.

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

- உரோமை திருப்பீடத்திற்கும் போர்த்துக்கல். ஸ்பானியா நாடுகளுக்குமிடையே 15ம் நூற்றாண்டின் இறுதியில் பத்ரோவாதோ எனும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.
- போர்த்துக்கல் தம் சமயம் சார்ந்த பணியை சிறப்பாக செய்து வந்தது. இதனால் உரோமை திருப்பீடம் அதிகம் தலையிடவில்லை.
- ஆனால் 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அந்நிய படையெடுப்புகள் காரணமாக போர்த்துக்கல் தமது குடியேற்ற நாடுகளை ஒவ்வொன்றாக இழக்கத்தொடங்கியது.
- 1622ல் உரோமையில் விசுவாசப் பரப்புதல் சபை உருவாகி அதனூடாக குடியேற்ற நாடுகளுக்கு மறைபரப்பாளரை அனுப்பி வைக்க ஆயத்தங்கள் நடைபெற்றன.
- 1648ல் இலங்கையில் ஆயரை நியமிக்க விசுவாசப் பரப்புதல் சபை முயற்சித்தாலும் போர்த்துக்கல் அரசின் ஆட்சி செயற்பாடுகள் காரணமாக இம்முயற்சி பிற்போடப்பட்டது.
- 1658ல் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய பின் குருக்களே இலங்கையில் பணிசெய்ய முடியாத சூழ்நிலை உருவாகியது.
- 1687ல்தான் வாஸ் அடிகள் தனியாக இலங்கை வந்து 10 வருடங்கள் பணியாற்றினார். பணியாற்றிய செய்தியும் வெளியே கசிந்தது.
- இலங்கைத் திருச்சபைக்குப் பொறுப்பாக இருந்த கொச்சின் ஆயர் 1696ல் யோசேப் வாஸ் அடிகளை குரு முதல்வராக முழு அதிகாரத்தோடு நியமித்தார்.
- எந்த ஆயரும் இலங்கை வரமுடியாத நிலையில் யோசேப் வாஸ் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.
- தூய யோசேப் வாஸ் அடிகளின் பணிபற்றிய செய்தி திருத்தந்தை 11ம் சாந்தப்பருக்கும் எட்டியது.
- அதன்பின் வந்த திருத்தந்தை 11ம் கிளமென்ற் இலங்கைக்கு குருக்களை அனுப்ப முயற்சிகள் செய்தார்.







- 1705ல் பேராயர் டீ டூர்தோன் பாண்டிச்சேரி வந்தபோது வாஸ் அடிகளின் பணிகளைப் பாராட்டியும், பல தகவல்களையும் அறிந்து கொண்டார். பரிபூரணபலன் கொண்ட ஒரு திருச்சிலுவையையும் வாஸ் அடிகளுக்கு அனுப்பிவைத்தார்.
- அதேபோல யோசேப் வாஸ் அல்லது அவர் பரிந்துரைக்கும் ஒரு குருவானவரை ஆயராக நியமிக்க தயாராக இருப்பதாகவும் செய்தியனுப்பினார்.
- இந்நிலையில் 1706ல் வாஸ் அடிகள் பேராயருக்கு தன் பணி பற்றிய தகவல்களை விரிவாக அனுப்பி வைத்தார். ஆயினும் புதிய ஆயர் நியமனம் பற்றி அதில் குறிப்பிடுவதைத் தவிர்த்திருந்தார். காரணங்கள் பல:

1.வாஸ் அடிகளின் தாழ்ச்சி.

2.ஆயராகத்தான் பணிசெய்ய வேண்டும் எனும் கட்டாயம் அவருக்கு இருக்கவில்லை. ஆயினும் அவர் வேறொரு குருவானவரை பரிந்துரைத்திருக்கலாம். அதற்கும் காரணம் உண்டு:

1.இலங்கையில் வாழும் கத்தோலிக்கரின் நிலையில் வாஸ் கொண்டிருந்தஅன்பும் அக்கறையுமாகும்.
2.இன்னொருவரை ஆயராக நியமித்தாலும் உரோமைக்கும் பத்ரோவாதோ அமைப்புக்கும் மோதல் ஏற்படும் சூழ்நிலை இருந்தது. இதனால் கோவாவிலிருந்து ஒரட்டோரியன் சபைக் குருக்கள் இலங்கைக்கு வருவது தடைசெய்யப்படலாம்.
3.அதேவேளை விசுவாசப் பரப்புதல் சபை ஐரோப்பிய மறைபணியா~ ளரை அனுப்புவதும் நடைபெற முடியாத காரியம்.

இந்நிலையில் பாதிக்கப்படுவது இலங்கை கிறிஸ்தவர்களே. இவ்விளைவுகளை வாஸ் அடிகள் தூர நோக்கோடு சிந்தித்து அவர் காலத்தில் இலங்கைக்கு ஆயர் நியமனம் மக்களுக்குபெரும் பாதிப்பை விளைவிக்கும் என உணர்ந்து செயல்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரது பணிகளின் வெற்றிக்கான காரணங்களை அறிந்து கொள்வோம்.**

### 1. இறைவனில் கொண்டிருந்த நம்பிக்கை

தன்னுடைய குருப்பட்ட நாளிலிருந்து தனக்குத் தரப்பட்ட பணிகளைத் தூய யோசேப் வாஸ் இறைவனின் திட்டம் என்ன என்பதை அறிந்த பின்பே நிறைவேற்றத் தொடங்கினார். சிறப்பாக, ஒரு செயலை ஆரம்பிக்க முன் அதனை இறைவனிடம் கையளித்து இறை நம்பிக்கையுடன் அதனை நிறைவேற்றினார். இலங்கைக்கான பயணம் ஆரம்பிக்க முன்பாக அது இறைவனால் தனக்குத் தரப்பட்ட சிறப்பான பணி என்பதனை உணர்ந்து, அதற்காகத் தம்மை ஆயத்தப்படுத்தினார். தமது பணியில் என்ன இடையூறு வந்தாலும் இறைவன் அதனை நன்மையாக மாற்றுவார் என்பதனை முழுமையாக நம்பினார். இதனால் அவரது பணிகள் பலன் கொடுக்கின்ற பணிகளாக அமைந்திருந்தன.

### 2. புனிதரின் செபவாழ்வும், ஒறுத்தல்களும்

தன்னுடைய பணிகளில் செபத்திற்கு முன்னுரிமை கொடுத்த புனிதர் ஒறுத்தல்கள் மூலம் அதனை வெற்றியானவையாக மாற்றினார். ஒவ்வொரு முக்கியமான முடிவுக்கும் முன்பு நீண்ட நேரம் செபித்தார். பல சந்தர்ப்பங்களில் பயணம் செய்வதற்கு மிருகங்களும், பல்லக்குகளும் கிடைத்த போதும் கால்நடையாகவே பயணம் செய்தார். தன்னிடமிருந்த அனைத்தையும் மற்றவர்களுக்கு கொடுத்தார். தனது உணவுகளைக் குறைத்து ஒறுத்தல் வாழ்வுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

### 3. புனிதரின் தாங்குதிறன்

புனிதர் தனது வாழ்நாளில் நிறைந்த அனுபவங்களைக் கொண்டிருந்தார். இவற்றினூடாகத் தம் வாழ்வில் சந்தித்த துன்பங்கள், துயரங்களில் தளர்ந்து விடாது உறுதியோடு தன் பணியைச் செய்தார். உதாரணமாக சில்லாலையில் பணிபுரிந்த காலத்தில் பல தடவைகள் மூப்பரின் கோபமான சொற்களுக்கு முகம் கொடுத்தும் அதனைத் தாங்கிக் கொண்டு இன்னும் சிறப்பாகப் பணிபுரிந்தார். பட்டினி, வறட்சி, நீரின்மை, உறவுகள் இல்லாத வாழ்வு, தனிமை, எதிரிகளால் ஆபத்து, வனவிலங்குகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றில் தமது தாங்குதிறனை இறைபணியின் வெற்றிக்காகப் பயன்படுத்தினார்.

இழப்புக்களில் இன்னும் அதிகமாக அவர் இறைவனை நோக்கி நெருங்கிச் சென்றார். தனது வேதனைகளை அவர் யாருக்கும் வெளிப்படுத்தியதில்லை. இதனால் அவர் வாழ்வில் அவருக்குக் கிடைத்த எல்லாவற்றிலும் அவர் எளிமையானவராக வாழ்ந்தார்.

### 4. ஆழ்ந்த ஆய்வுகள்

தனது ஒவ்வொரு பணியிலும் ஆழ்ந்த இறையனுபவத்தை அடித்தளமாகக் கொண்டு ஒவ்வொரு சிறிய விடயத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்து முடிவை எடுத்தார். உதாரணமாக கோவாவிலிருந்து இலங்கைக்கான பயணம் தொடங்கிய போது தென்பகுதி கிராமங்களுடாக தூத்துக்குடியை வந்தடைந்தார். வரும் வழியில் ஒவ்வொரு விடயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து சரியான பயணப்பாதை எது என்பதை தீர்மானித்தார். ஒரு இடத்தில் பணியை ஆரம்பிக்க முன்பாக அந்த இடத்தைப் பற்றிய பூகோள, கலாச்சார அறிவைப் பெற்றிருந்தார். இதுவே அவரது வெற்றிக்குக் காரணமாக அமைந்திருந்தது.



### 5. புரிந்துணர்வும் ஏற்றுக்கொள்ளும் தன்மையும்

பிற மதத்தவராயினும் பிற இனத்தவராயினும் அவர்களைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை அவர் பெற்றிருந்தார். கண்டி நகரில் வாழ்ந்த பௌத்த மத குருக்களையும் ஏனைய மதத்தலைவர்களையும் உண்மையான உள்ளன்புடன் நேசித்தார். மற்றவர்களுடைய கருத்துக்களுக்குப் பொறுமையுடன் பதிலளித்தார். ஒவ்வொருவருடைய தனித்தன்மையையும், சிறப்பான குணாதிசயங்களையும், பணி ஆர்வத்தையும் அறிந்து அதற்கேற்ப பணித்தளங்களையும் பிரித்துக் கொடுத்தார்.

### 6. மொழியறிவு

பிறப்பால் கொங்கணி மொழியைப் பேசிய இவர் காலப்போக்கில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார். இம்மொழிகளில் பாடல்களையும், செபங்களையும் உருவாக்கினார். இயன்ற வரை இம்மொழிகளிலே மறையுரை ஆற்றினார். பாவ மன்னிப்புத் திருவருட்சாதனத்தை அம்மக்களுடைய மொழிகளிலே வழங்கினார். அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் மொழிப்புலமையை அறிந்திருந்த இவர் அடிகளாரை இவ்விரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெறுமாறு பணித்தார். இன்று நாம் காண்கின்ற **பசாம்** போன்ற வழிபாட்டு வடிவங்கள் இவ்விரண்டு குருக்களின் ஆழமான மொழியறிவிற்குச் சான்றாகும்.

### 7. பணிப்பகிர்வும், பிறரில் இருந்த நம்பிக்கையும்

தனியாகப் பணிபுரிந்த காலத்தில் தனது பணித்துணையாளர் யோன் மூலமாகவும், ஏனைய ஒறத்தோரியன் குருக்களுடன் பணிபுரிந்த காலத்தில் அக்குருக்கள் மூலமாகவும் மறைப்பணி வெற்றிபெற உழைத்தார். இறைவனையும், தன்னையும் எந்தளவிற்கு நம்பினாரோ அந்தளவு தமது உடன் பணியாளரையும் அவர் நம்பினார். குருக்களின் எண்ணிக்கை அதிகரித்த போது பரப்பாங்கண்டல் ஆலயத்தில் பணித்தளங்களைப் பிரித்து ஒவ்வொரு பிரதேசமும் ஒவ்வொரு குருவிடம் கையளிக்கப்பட்டது.

தமது மூப்பர்கள் கூறுவதை ஏற்றுக் கொண்ட புனிதர் அதன்படி தமது தீர்மானத்தை பலவேளைகளில் மாற்றியமைத்தார். நடைமுறைக்கு சாத்தியமற்றவை முன்மொழியப்படும் போது பெருந்தன்மையுடன் அவற்றை மாற்றியமைத்து சாத்தியமானவற்றை நடைமுறைப்படுத்தினார்.

### 8. ஒறத்தோரியன் சபை

இலங்கை மறைப்பணிக்குத் தனியொரு குருவின் பணி சாத்தியமற்றது என்பதை உணர்ந்த தூய யோசேப் வாஸ், அப்பணிக்கு மேலும் குருக்களை அனுப்பும்படி சபை மேலாளரிடம் வேண்டினார். பல நூற்றாண்டுகள் பல பணிகள் புரிந்திருந்தாலும் இலங்கைப்பணியே கோவா ஒறத்தோரியன் சபை செய்த மிகப்பெரிய பணியாக அமைந்திருந்தது. இன்றும் இக்குருக்களின் உன்னத பணியின் சான்றாக இலங்கை முழுவதும் பல விசாலமான போர்த்துக்கேய ~ இந்திய கட்டடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் காட்சியளிக்கின்றன. அதேபோல போளவத்தை, கொட்டியாரம், பரப்பாங்கண்டல் போன்ற இடங்களில் இக்குருக்களின் கல்லறைகள் அவர்கள் இம்மண்ணில் சிந்திய வியர்வையின் கதைகளைக் கூறுகின்றன.

### 9. பதவிகளுக்கு அப்பாற்பட்ட பணி

கனாரா பிரதேசத்தில் குருமுதல்வர் எனும் உயர் பதவியைக் கொண்டிருந்த தூய யோசேப் வாஸ் இறையழைப்பை உணர்ந்தவராக அப்பதவியைத் துறந்து அடிப்படை வடிவம் கூட பெற்றிராத ஒரு குருக்களின் குழுவில் இணைந்த போது பலருடைய ஏளனப் பார்வைக்கு நிச்சயமாக அவர் ஆளாகியிருப்பார். எனினும் அக்குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் அதை ஒரு தியான சம்பிரதாய சபையாக உருவாக்க அவர் போராடினார். சபைக்கான அத்திவாரம் இடப்பட்டதும் தலைமைப் பொறுப்பை மூத்த குருவாகிய அருட்பணி பாஸ்கல் டா கொஸ்டா ஜெரேமியாசிடம் கையளித்தார். மீண்டும் சாதாரண ஒரு குருவாக இலங்கை நோக்கி பயணமானார். குருத்துவ உடை சமூக அந்தஸ்தாகக் கருதப்பட்ட காலப்பகுதியில் அதைத் துறந்து சராசரிக் கூலியாளின் உடையான இடுப்புத் துண்டை மட்டும் அணிந்தவராக இம்மண்ணுக்கு அவர் வந்தார். இம்மண்ணில் அவரது பணியின் மகத்துவத்தை உணர்ந்து கொண்ட திருச்சபை, இலங்கையின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாக அவரை நியமித்த போதும் தமது பணிக்கு அது இடையூறாக இருக்கும் என்பதனை உணர்ந்த தூய யோசேப் வாஸ் அந்நியமனத்தை நிராகரித்தார். அதனால்தான் தூய யோசேப் வாசின் உருவப்படத்தில் ஆயருக்குரிய கோலும் முடியும் அவரோடு தொடர்பில்லாமல் தனியாக வரையப்பட்டுள்ளன.

### 10. புதிய பாதைகளில் பயணம்

இலத்தீன் மயமாக்கல் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒரு சவாலாக இருந்த காலத்தில் துணிவுடன் சுய மொழிப் பாவனைக்கு இலங்கைத் திருச்சபையை இட்டுச் சென்ற பெருமை இவரையே சாரும். ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் தம் சொந்த மொழியிலும் இலத்தீன் மொழியிலும் வழிபாடுகளை செய்த வேளையில் தூய யோசேப் வாஸ் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வழிபாடுகளை முன்னெடுத்தார். இதுவே குருக்கள் இல்லாத காலங்களில் விசுவாசம் உறுதி பெற உதவியது.

### 11. இரகசியத்தன்மை

குருவேட்டை ஒல்லாந்தரால் முன்னெடுக்கப்பட்ட போது தமது இருப்பை மிகவும் இரகசியமாகத் தூய யோசேப் வாஸ் பேணினார். மூப்பர்களும், அண்ணாவியரும் இதற்கு உறுதுணையாக இருந்தனர். அனேகமான சந்தர்ப்பங்களில் தமது பணி என்ன என்பதையும் அது எங்கே நடைபெற்றது என்பதனையும் எந்தவித ஆவணங்களிலும் அவர் குறிப்பிடவில்லை. இதனால் புனிதரின் உன்னத பணியின் ஒருபகுதி இன்றும் இலைமறை காயாகவே இருக்கின்றது.

### 12. மாறுவேடம் புனையும் திறமை


கத்தோலிக்கரை அடையாளம் காண்பதற்காகவும் ஒல்லாந்தரிடமிருந்து தப்புவதற்காகவும் அவர் பல வேடங்களைப் பூண்டார். முக்கியமாக அவர் கூலியாள் வேடத்தை மிக சிறப்பாக புனைந்தார். இதனால் சிதறிச் சென்ற கத்தோலிக்கரை இலகுவாக அவரால் அடையாளம் காண முடிந்தது. ஏனைய பல ஒறத்தோரியன் சபைக்குருக்களும் இவ்வாறு மாறுவேடம் புனைவதைப் பின்பற்றினர்.

### 13. நிலையான அமைப்புக்களை உருவாக்கியமை

சுதேச குருக்களோ துறவிகளோ இல்லாத ஒரு இக்கட்டான சூழலில் கத்தோலிக்க விசுவாசம் உடையாமல் காக்கப்பட வேண்டுமென்றால் பொதுநிலையினர் இப்பணியைச் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதனை உணர்ந்தவராக மூப்பர், அண்ணாவி, மெலிஞ்சியார் (Bell In charge என்பதன் மருவிய வடிவம்) போன்ற பணி நிலைகளை உருவாக்கி, குருக்கள் இல்லாத காலத்தில் சிறப்பாகப் பணிபுரிய அவர்களைப் பயிற்றுவித்தார். அதேபோலச் செபங்கள், வழிபாட்டுப் பாடல்கள், கீர்த்தனைகள், மன்றாட்டு மாலைகள் போன்றவற்றை உருவாக்கிச் செபத்தின் மூலம் விசுவாசம் உறுதி பெற உதவி புரிந்தார்.

### 14. வாழும் புனிதர்

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் விட அவரைக் கண்டவர்கள் அவர் வாழும் புனிதர் என்பதை உணர்ந்து கொண்டனர். இதனால் வார்த்தைகளை விட அவரது வாழ்க்கை உன்னதமான போதனையாக அமைந்திருந்தது. இதுவே அவரது பணியின் வெற்றிக்கு மிகவும் உதவி புரிந்த காரணியாக அமைந்திருந்தது.



**தூய யோசேப் வாஸ் ஆண்டுக்கான மாபெரும் வினாவிடைப் போட்டி**

- ❖ இவ்வருடம் தை மாதத்திலிருந்து திருமலைத்தீபம் பத்திரிகையில் தூய யோசேப் வாஸ் தொடர்பான பல்வேறு ஆக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- ❖ இக்கட்டுரைகள் அனைத்திலும் இருந்து வினாக்கள் உருவாக்கப்பட்டு இவ்வருடத்திற்கான இறுதி திருமலைத்தீபம் பத்திரிகையில் அவை வெளியிடப்படும்.
- ❖ இவற்றுக்கான விடைகளை எழுதி 06 ஜனவரி 2018 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக மறைக்கல்வி நடுநிலையத்திற்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.
- ❖ வயதெல்லை கிடையாது. தரப்படும் வினாக்களுக்கு மிக அதிகமான சரியான பதில்களை எழுதுவோர் மத்தியிலிருந்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடத்திற்குரியவர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும். 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖ இறுதி முடிவுகள் மறைக்கல்வி நிலையத்தினால் எடுக்கப்படும்.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

**அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 மணிநேரம் அவரோடு



மௌனத்தை மொண்டு
கொண்டு
மண்டி இட்டு அமர்ந்திருந்தேன்

அதோ !
அந்த அப்பத்தில் ~ என்
அப்பன் அமர்ந்திருந்தார்

என் இமை அணைத்து
உட்கார்ந்தேன்
அவர் எனை அணைத்து
பேசலானார்

உறைந்திருந்த ~ என்
சோகங்கள்
சொட்டுச் சொட்டாய்
சொரியத் தொடங்கியது

பலமுறை முறையிட்டேன்
என் பெற்றோரிடம்
பதிவற்ற வினாத்தாள்கள் தான்
என் சோகங்கள்
ஒரே ஒரு முறை
அவர் அணைப்பு!

வார்த்தைகள் பிதற்றினேன்
என் உதடுகள் பிரியவில்லை
என்னவொரு பிரகாசமான
வெளியீடு ~ அது
ஆனாலும் விழிகள் திறக்க
மறந்து போனேன்.

நான் மௌனிக்க ~ எனை
முதன் முறை முழுமையாக
அறிந்து கொண்டது
அவர் தான்

இதுவரை!
என் வாழ்வின் நிமிடங்கள்
தேங்கி நிற்பதனை
உறைப்பேற்ற நான்
அவரோடு இருந்த
ஒரு நாள் மணித்துளிகளை
துரத்த முடியாது
தோற்றும் போனேன்

நாள் ஒன்று போதும்
அவர் என்னோடு என்பதனை
என் ஏட்டில் எழுத!

நாள் ஒன்று போதும் ~ அவரோடு
நான் 'நான்' என்பதை
உணர்ந்து வாழ

ஆக்கம் : ஜெனிபர்
சகாயபுரம்,
மூதூர்

## பாதை காட்டும் புனிதர்கள் - செப்டெம்பர்
## அதிதூதர்களான தூய மிக்கேல், தூய கபிரியேல் ரபேல்

மிக்கேல் என்றால் இறைவனுக்கு நிகர் யார்? என்று பொருள். விண்ணகத்தில் சாத்தானையும் அவனது ஆட்களையும் எதிர்த்து தேவதூதர்கள் போரிட்டனர். அவர்களில் முக்கியமானவர் மிக்கேல். இவர் திருத்தூதர்களின் காலத்திலிருந்தே திருச்சபையின் பாதுகாவலராக வணங்கப்பட்டுள்ளார். தனிமனிதர்களும், பல பங்குகளும், மறைமாவட்டங்களும் இவரைப் பாதுகாவலராக ஏற்று அவரின் பெயரைச் சூடிக்கொண்டுள்ளனர். திருத்தந்தை 13ம் சிங்கராயர் "அதிதூதரான மிக்கேலே எனத் தொடங்கும் செபத்தை இயற்றி, திருப்பலிக்குப் பின் செபிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**தூய கபிரியேல்**

கபிரியேல் என்றால் "இறைவனின் பலம் என்று பொருள். இப்புனிதர் தான் ஆண்டவரின் பிறப்பையும் திருமுழுக்கு யோவானின் பிறப்பையும் முன்னறிவித்தவர். மேய்ப்பர்களுக்கு காட்சி தந்து அவர்கள் குழந்தை இயேசுவை தரிசிக்க வழிகாட்டியவர். கெத்சனே தோட்டத்தில் ஆண்டவரைத் தோற்றியவரும் இவரே. பழைய ஏற்பாட்டில் தானியேல் இறைவாக்கினருக்கு இவர் காட்சி கொடுத்தார். தானியேல் பாரசீக கிரேக்க அரசுகளை காட்சியில் கண்டபின் கபிரியேல் தோன்றினார். இவரைக் கண்டு தானியேல் நடுங்கி முகம் குப்புற விழுந்ததாக திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம்.

**புனித ரபாயேல்**

ரபேல் என்ற சொல்லக்கு "இறைவன் குணமாக்கினார்" என்பது பொருள். தொபியாசுக்கு இவர் அசரியாஸ் எனும் பெயருடன் தோன்றி அவருடைய மகனை அழைத்துச் சென்று பத்திரமாய் திருப்பிக் கொண்டு வந்து சேர்த்தார். அவருக்கு வர வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுத்தார். மீனின் வாயினின்று இளைஞனைக் காத்தார். தொபியாஸ் கண்பார்வை பெற உதவினார். இறைவனின் சிம்மாசனத்திற்கு முன் நிற்கும் ஏழு தூதர்களில் நானும் ஒருவன். என் பெயர் ரபேல் என்று அறிவித்தார்.

செப்டெம்பர் 29ம் திகதி இப்புனிதர்களின் நினைவு நாளைக் கொண்டாடுகின்றோம். இன்று எவனை விழுங்கலாம் என்று சாத்தான் தன் வாயை அகலமாகத் திறந்து கொண்டு அலைகின்றான். சுற்றிவரக் கட்டில்லாக் கிணற்றுக்குள், விழுந்து மடியும் செம்மறியாடுகளைப் போல, நம்மில் பலரும் இன்று சாத்தானின் வலைக்குள் விழுந்து தவிக்கின்றார்கள். சாத்தானின் பிடியில் இருந்து நம்மை விடுவிக்க இப்புனிதர்களின் உதவியை நாடுவோம்.

கலாபூஷணம் புலவர் : அரியநாயகம்,
128, 3ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்




## தூய மத்தேயு ஆண்டு



### உவமைகள்


- இயேசு உவமைகளை உருவாக்கவில்லை. அவற்றைப் பூரணப்படுத்தினார்.
- இது அவருடைய விருப்பமான போதிக்கும் பாணியாகும்.
- இயேசு அதிகம் தன் போதனைகளில் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். எசேக்கியேல் இறைவாக்கினர் இதுபோன்று உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். உதாரணம்: கழுகு மற்றும் திராட்சைக் கொடி உவமை (எசே 17: 1 – 24) அருவருப்பான சமையல் சட்டி உவமை. (எசே 24: 1 – 14).



- அல்லது வாழ்வின் சம்பவங்களிலிருந்து ஒருவிடயத்தைக் கூறி ஆன்மீக வழிகாட்டலைத் தருகின்றார். உதாரணம் நல்ல சமாரியர் உவமை (அன்பு, இரக்கம்) இரவில் வந்த நண்பர் (செபத்தில் உறுதி).
- இயேசுவின் உவமைகள் ஒத்தமை நற்செய்திகளில் (மத்தேயு, மாற்கு, லூக்கா) தரப்பட்டுள்ளன.
- சில உவமைகள் மூன்றிலும் தரப்பட்டுள்ளன (விதைப்பவர் உவமை).

**உவமை என்றால் என்ன?**

- உவமை என்பது சிறிய, சாதாரணகதை. ஆனால் அது ஆழமான முக்கிய ஆன்மீக செய்தியைத் தருகின்றது. எம் வாழ்வோடு ஒப்பிட்டுப்பார்க்க அழைக்கின்றது.
- உதாரணமாக கடுகு விதை உவமை, மத் 13: 31 – 32.
- இதில் ஓர் விதை, சிறியவிதை, ஆனால் வளர்ந்தால் மிகப் பெரியதாக வளர்த்துவிடும்.
- செய்தி என்ன? இறையாட்சி சிறியதாக தொடங்கி பின் பெரியதாக பரவிவிடுகின்றது.
- நற்செய்தியாளர் உவமையைத் தொடங்கும் போது "ஒப்பாகும்" (மத் 13:47) அல்லது "ஒப்பிடலாம்" (மத் 20:1) எனக்குறிப்பிடுகின்றார்.





- மத்தேயு தன் நற்செய்தியின் மையச் செய்தியாகிய இறையாட்சி பற்றி 10 உவமைகள் தந்துள்ளார். இவற்றுள் 7 உவமைகள் 13ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன.
- மத்தேயுவிற்கே தனித்துவமான உவமைகள்:

1.வயலில் தோன்றிய களைகள் (13: 24 – 30)
2.மன்னிக்க மறுத்த பணியாளர் (18: 23 – 35)
3.திராட்சைத் தோட்ட வேலையாள்கள் (20 : 1 – 16)
4.இரு புதல்வர்கள் (21: 28 – 32)
5.பத்துத் தோழியர் (25: 1 – 13

- இது போன்ற மாற்கு நற்செய்தியில் ஒரு உவமையும், லூக்கா நற்செய்தியில் 10 உவமைகளும் அந்த நற்செய்திக்கே தனித்துவமானதாக அமைந்துள்ளன.
- யோவான் நற்செய்தியில் நாம் உவமைகளை காண முடியாது. மாறாக சொல் வடிவம் அல்லது உருவகம் (figure of speech) எனக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணகத்தின் திறவுகோலான திருச்செபமாலை

பாமரர்களின் பைபிள், ஏழைகளின் ஆயுதம், விண்ணகத்தின் திறவுகோல் என்றெல்லாம் அழைக்கப்பட்ட செப~மாலையின் மகிமை, பெருமையைப் பற்றி நோக்குவோம்.

'உலகும் உலகு சார்ந்த பொருட்களும் தீயவை, கடவுளின் மனிதப் பிறப்பு சாத்தியமற்றது' என்ற தப்பான கொள்கை, திருச்சபையை 13ஆம் நூற்றாண்டில் தாக்கியவேளை, தூய டொமினிக் (தூய சாமிநாதர்) அதற்கு எதிரான போதனையில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அன்னை மரியா அவருக்குத் தோன்றி,

'இதுவரை உன்னுடைய கடுமையான உழைப்பு மிகக் குறைந்த பலனையே தந்திருக்கின்றது என்றெண்ணி ஆச்சரியப்படாதே. ஏனெனில் காய்ந்த பூமியில் நீ விதைத்துள்ளாய். ஆண்டவரின் அருள் என்ற நீரைப் பாய்ச்ச வேண்டும். இறைவன் பூமியைப் புதுப்பிக்க நினைத்த போது, அவரின் தூதரை அனுப்பி வாழ்த்தினைப் பொழிந்தார். 'அருள் மிகப்பெற்றவரே வாழ்க' என்ற வாழ்த்து இறைவனை பூமிக்குத் தந்தது. அதே போல 150 வாழ்த்துக்களை உள்ளடக்கிய எனது செபமாலையைப் போதித்தால் நிறையப் பலன் பெறுவாய் என்றார்.

அதுமுதல் செபமாலையே அவருடைய மறையுரையின் மையமானது. ' அருள் மிகப் பெற்றவரே வாழ்க!.... இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்' என்ற வாழ்த்தில் மகன் மீட்பர் மாட்சி பெற்றவர் என்ற கருத்தியல்கள் அடங்கியுள்ளன.

திருச்செபமாலை ஓதுவதால் பாவிகள் மன்னிக்கப்படுவர், கண்ணீர் சிந்துவோர் களிப்படைவர், சோதனைகளில் உழல்வோர் சுகம் பெறுவர், தறவிகள் புத்துயிர் பெறுவர், அடிமைத்தனத்திலுள்ளோர் விடுதலையடைவர், மரித்தோர் நித்திய இளைப்பாற்றியடைவர், மரணத்தின் பின் உடன் மோட்சமடைவர், தாகமுள்ள ஆன்மாக்களின் தாகம் தீர்க்கப் பெறுவர்.

'செபமாலை செபிக்கும் ஒரு படையணியை என்னிடம் கொடுங்கள். நான் உலகை வென்று காட்டுகிறேன்' என்றார் திருத்தந்தை 9ம் பத்திநாதர். ஆம் திருச்செபமாலை எத்தகைய வலிமையுடையது என்பதை இதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. உயிரோடு இருக்கும்போது உரைக்கும் செபமாலைத் தியானம் எம் துன்ப துயரங்களில் ஆறுதலாக. பாவத்திலிருந்து விடுதலை தந்து ஆன்மீக ஈடேற்றத்திற்குரியதாக, ஆண்டவரின் ஆட்சியைப் பற்றிக்கொள்ளக் கூடிய அற்புத மருந்தாக துலங்குகின்றது.

கரம் நீட்டிக் கேட்டால் சிலர் கைநிறையக் கொடுப்பர். சிலர் காறித் துப்புவர். இதைத் தூய அன்னைத்தெரேசா தன் வாழ்வில் அனுபவித்தவர். எம் அன்னை அப்படிப்பட்டவள் அல்ல. அள்ளி அள்ளி வழங்கும் அட்சய பாத்திரமவள். அற்புதங்களால் அகிலத்தை அன்பு செய்யும் அம்மா மாதாவின் அன்பால் நாமும் அனுதினமும் ஆட்கொள்ளப்பட அகமகிழ்வுடன் திருச்செபமாலையை தித்திப்புடன் செபித்திடுவோம்.

தொகுப்பு : ஜெயவதனி மரியதாஸ்
செல்வநாயகபுரம்.



## இளையோர் திறன் உயர........

**சென்ற இதழ் தொடர்ச்சி ................**

நீ பரிணாமத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய். பஞ்ச பூதங்களும் உனக்குச் சேவகம் செய்யக் காத்திருக்கின்றன. வெளிப்படு! உன்னை மூடிய மண்ணைப் பிளந்து புறப்படு' என்று.

எடிசனைப் போல் திறமைகளை அடையாளம் கண்டு, நியூட்டனைப் போல் நமக்கான துறையைத் தேர்ந்தெடுத்து, அலெக்சாண்டர் போல் இரவு பகலாக உழைத்து, கலாமைப் போல வாய்ப்புக்களை வசமாக்கித் திறமையை உணர்ந்து திறனை வளர்த்தல் என்பதே இளையோரின் தேடல்களாக அமைய வேண்டி இருக்கிறது.

சரியான பயிற்சி, அதற்கான முயற்சி ஆகியவற்றோடு வாழ்விற்கான இலக்குகளை வென்று சாதிக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கேற்பத் **தயாராகுவோம் நம் இதயம் இயங்கும் வரை......!**

**04. முயற்சியின் பதிவு**

இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ், பி.ஏ.ஆங்கிலம், எம்.ஏ அரசியல், எம்.ஏ.சட்டம், முனைவர் பட்டம் என எல்லாவற்றிலும் முன்னிலை: பட்டிமன்றம், நாடகம் என எல்லாவற்றிலும் அங்கீகாரம், 1996இல் தேசிய ஜூனியர் டென்னிஸ் சாம்பியன், ஆசிய டென்னிஸ், தேசிய பெண்கள் டென்னிஸ் எல்லாவற்றிலும் தனக்கென ஒரு தனி முத்திரையைத் தம் முயற்சியினால் பதிவு செய்த ஒரு பெண் இருக்கிறார். அவர் யார்? எல்லாவற்றையும் விட மனிதத்தை மதிக்கிற சாதனைப்பெண். அவர்தான் கிரண்பேடி ஐ.பி.எஸ்.

எப்படி உங்களால் முடிந்தது? என்ற கேள்விக்கு அவர் 'நான் பள்ளியில் படிக்கும்போதே மற்ற மாணவிகளை விட, எல்லாவற்றிலும் மூன்று மடங்கு முன்னே இருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் தான் பயிற்சியெடுத்தேன். அந்தக் குறிக்கோள்தான் என்னை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது' என்கிறார்.

செயல்புரியும் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் உணர்வதற்கான இதயம் சிந்தனைத் திறனுள்ள மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் மூன்றும் இருந்தே ஆக வேண்டும் என்கின்றனர் அறிஞர்கள். 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!' என்ற மனோன்மணீயம் சுந்தரனாரின் நம்பிக்கை வரிகள் இதையேதான் எதிரொலிக்கின்றன.

கட்டுரையாளர், கவிஞர், கதாசிரியர், புதின ஆசிரியர், ஓவியர், சிற்பி, நாடகாசிரியர் என இத்தனை முகமும் கொண்டு ஒரு மனிதனாக வாழ முடியுமா? 'வாழ முடியும்' என சாதித்தவர் இதே பிரபஞ்சத்தில் நகமும் சதையுமாக வாழ்ந்துள்ளார். பன்முகப் பரிமாணங்களோடு உலவிய ஞானி ஓஷோவை அதீதமாய் பாதித்தவர் அவர். அரேபிய உலகிற்குத் தந்த விலைமதிப்பில்லாத சொத்து, லெபனான் மண்ணின் வித்து 'கலீல் ஜிப்ரான்' தான் அந்த அறிவு ஜீவி : கலீல் இளையோரின் சிந்தனைத் தெரிப்புகளுக்கு ஒரு முகவரி!.... முன்னோடி!....

இரவீந்திரநாத் தாகூர் கீதாஞ்சலியில், எங்கே மனம் பயமில்லாமல் தன் தலையைக் கம்பிரமாய் நிமிர்த்துகிறதோ? எங்கே அறிவு சுதந்திரத்தோடு ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறதோ, எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து சொற்கள் வெளிப்படுகின்றனவோ அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில் என் தந்தையே! என் நாடு விழிப்புறுமாக' எனப் பதிவு செய்கிறார்.

ஒரு நாட்டின் மலர்ச்சி, சுதந்திரம் இவையெல்லாம் ஒளிவிசி நிற்பதற்கு மனம், அறிவு இவற்றின் மதிப்புமிக்க செயல்கள்தான் போற்றுதலுக்குரியன..... தொடரும்..................

நன்றி ~ விவிலிய விருந்து

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

- ❖ தூயபவுல் இயேசுவின் போதனையைப் பெற்று ஆண்டவரில் திருமணம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.
- ❖ "ஆண்டவரில் வாழும் வாழ்வு" பற்றி தூய பவுல் குறிப்பிடுகின்றார் (1 கொரி 7).
- ❖ இல்லம் பற்றிய சட்டம் (கொலோ 3: 18 – 4:1 எபே 5: 21~6:9 1 பேது 2:18 – 3:7) ஆண்டவரில் வாழும் வாழ்வு குடும்பத்தில் உள்ள எல்லா உறவுகளையும், நிலைகளையும் குறித்து நிற்கின்றது.
- ❖ 'ஆண்டவரில் வாழும் வாழ்வும்". "கிறிஸ்துவில் நாம் ஒருவரே" (கலா 3:28) எனும் நிலையும் கிறிஸ்தவ பார்வையில் அனைத்து வேறுபாடுகளையும் முறியடிக்கின்றது.
- ❖ தூயபவுல் எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் ஆழமான விளக்கத்திற்கு எம்மை வழிநடத்துகின்றார். ஓசேயா நூலில் குறிப்பிடப்பட்டதைப் போன்று திருமணம் என்பது கடவுள் தன் மக்களோடு உருவாக்கிய ஓர் உடன்படிக்கை (ஓசே 2: 18 ~25). இது கிறிஸ்துவில் முழுமை பெறுகின்றது. இவ்வாறு ஓர் ஆணும் பெண்ணும் இணையும் உடன்படிக்கை கிறிஸ்துவில் முழுமை பெறும் இறைவனின் உடன்படிக்கைக்கு அடையாளமாகும்.
- ❖ அன்று இறைவன் தொடங்கி வைத்தது முடிவு வரைக்கும் தொடரும்.





- ❖ திருமணம் ஓர் அருட்சாதனமாக இரு விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது.
  1.பாவத்தின் விளைவுகளுக்கு தீர்வாகின்றது.
  2.புனிதப்படுத்தும் அருளைப் பெறும் வழியாகின்றது.
- ❖ மனிதரின் கடின உள்ளம் திருமணத்தின் புனிதத்தன்மைக்குப் பெரும் சவாலாகின்றது.
- ❖ எனவே காலத்திற்குக் காலம் இது மனமாற்றம், புதுப்பித்தல், முதிர்ச்சி போன்ற நிலைகளைக் கடக்க வேண்டும்.
- ❖ திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதைப் போன்று "தயவு செய்து", "நன்றி", "மன்னிக்கவும்" போன்று சிறப்பான பண்புகளால் திருமணம் முதிர்ச்சியடைய வேண்டும்.
- ❖ அடுத்தவருக்காக கொடுக்கும் நேரம், செபநேரம், மன்னிப்பு, பொறுமை, விட்டுக்கொடுத்தல், பாராட்டுதல், நன்றியுணர்வு, அன்பு, திருப்பலி போன்ற நல்ல விடயங்கள் வளர வேண்டும்.
- ❖ திருவெளிப்பாட்டு நூலில் ஆட்டுக்குட்டியில் திருமணவிழா (தி.வெ 19:7,9) இறுதிக்கால நிகழ்ச்சிகளின் அடையாளம். திருமணமும் குடும்பமும் இறுதிக்கால அடையாளங்களாகும். உலக திருமணம் என்பது இறுதிக்கால திருமணத்திற்கு ஓர் முன்சுவை, முன்னடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

**48. கண்டி**

தூய யோசேப் வாஸ் அடிகளாரின் பிரதான மறைபரப்பு நிலையமாக கண்டி காணப்பட்டது. இங்கு வருகை தந்த அடிகளார் இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னனால் இரண்டு வருட காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார். விடுதலை செய்யப்பட்ட பின் மன்னனின் அனுமதியுடன் போகம்பரை வாவியின் அருகில் தேவ அன்னைக்கு அர்ப்பணித்து ஆலயம் ஒன்றை கட்டினார். மேலும் வரட்சி நிரம்பிய காலத்தில் ஆசீர் வேண்டி மழை பெய்வித்ததும், கண்டி நகர் முழுவதும் அம்மை நோயால் பாதிக்கப்பட்ட வேளை இரக்க செயல் பல புரிந்து மக்களை காப்பாற்றியதும் இவ்விடத்திலேயே ஆகும். அடிகளார் கண்டியை தமது மத்திய நிலையமாக அமைத்துக் கொண்டார். மேலும் கி.பி. 1711 ஆம் வருடம் ஜனவரி மாதம் 16ஆம் நாள் அடிகளார் இறையடி சேர்ந்த போது அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதும் இவ்விடத்திலேயே ஆகம். ஸ்ரீ விஜய ராஜசிங்க மன்னனுடைய காலத்தில் இவ்வாலயம் அழிவுக்கு உட்பட்டது.

**49. வாக்கோட்டை புனித அந்தோனியார் ஆலயம்**

இவ்விடமானது தூய யோசேப் வாஸ் அடிகளாரின் பாதம்பட்ட இடமாகும். ஒல்லாந்த கலாபனையின் விளைவாக இடம்பெயர்ந்த கத்தோலிக்கர்கள் மன்னன் இராஜசிங்கனின் அனுசரணையுடன் வாக்கோட்டை என்னும் இக்கிராமத்தில் தஞ்சமடைந்தனர். அவர்கள் தங்களோடு எடுத்து வந்த போர்த்துக்கேய சம்பிரதாயங்களுக்கு அமைவாக அமைக்கப்பட்ட இத்தேவாலயம், இன்று பிரதான யாத்திரை ஸ்தலமாக விளங்குகின்றது. கலகங்கள் காரணமாக இச்சுரூபம் சோற்றுப் பானைக்குள் ஒருமுறை வைத்தும், இன்னுமொரு முறை மண் சுவருக்குள் வைத்தும் இரண்டு தடவைகள் அழிவுக்குட்படாமல் மறைத்து வைக்கப்பட்டது.

**50. தந்தத்தினாலான திருச்சிலுவை**

கி.பி. 1746ஆம் ஆண்டு கத்தோலிக்கருக்கு எதிராக ஏற்பட்ட கலகங்களின் காரணமாக வேஉட தேவாலயத்தில் இருந்த இந்த தந்தத்தினாலான சிலுவை மலையக பிரதேசத்துக்கு எடுத்தச் செல்லப்பட்டதும் மீண்டும் கத்தோலிக்கர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. இன்றும் இச்சிலுவை வாக்கோட்டை தேவாலயத்தில் மிக பரிசுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

**51. மானியன் கிராமம்**

போர்த்துக்கேயர் காலத்தில் தேவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயம் ஒன்று இருந்தது. தற்போது அவிஸ்சாவெல்ல பிரதேசத்தில் இருக்கும் இவ்விடத்தில் கல்விகாரை ஒன்று காணப்படுகின்றது. விகாரைக்கு அண்மையில் தூய யோசேப் வாஸ் அடிகளார் மறைந்திருந்ததாக நம்பப்படும் கற்குகை காணப்படுகின்றது. இவ்விகாரையில் தூய யோசேப் வாஸ் அடிகளார் பயன்படுத்திய கட்டில் இருப்பதாக இப்பிரதேச வாழ் மக்களிடையே நம்பப்படுகின்றது.

**52. இரத்தினபுரி கந்தேகமுவ**

தற்போது அகலியகொடையில் அமைந்துள்ள கந்தேகமுவ கிராமமானது தூய யோசேப் வாஸ் அடிகளாரின் பாதம் பெற்ற மற்றுமொரு பிரதேசமாகும். அவருடைய காலத்தில் பாதுவா தூய அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயம் ஒன்று இவ்விடத்தில் இருந்ததாக சொல்லப்படுகின்றது.



# மத்தேயு நற்செய்தி ஓர் அறிமுகம்

மத்தேயு காட்டும் இறையரசு

தொடர்ச்சி ................

**விண்ணரசுப் பணி (திருத்தூதுப் பொழிவு அதி - 10 )**

இயேசுவின் இறையரசில் நுழைய தேவையான தகுதிகள் மலைப்பொழிவில் தரப்பட்டுள்ளது. அதை ஏற்றுக் கொண்டோர் என்ன செய்ய வேண்டும் எனும் வினா எழுகிறது. அதற்கு இயேசு, ' அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்' (மத் 6 :33) என்கிறார். இப்படி இறையாட்சியை விரும்பி வந்தவர்கள் தான் திருத்தூதர்கள். அவர்கள் இறையரசுப்பணியின் உடன் உழைப்பாளர்கள். இயேசு செய்த பணியை செய்வதே அவர்களின் வேலை. இயேசு இறையரசு வந்துவிட்டது. என்று போதித்தது போல (மத் 4:17) அவர்களும் போதிக்க வேண்டும். ' விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள்' (மத் 10:7) என்ற இயேசுவின் வார்த்தைகள் வெறும் வாய் வழிப் போதனை மட்டுமல்ல. இந்தப் போதனையின் முழுமை அவர்களின் செயல்பாட்டில் இருக்கிறது. எனவே நலம் குன்றியவர்களை குணமாக்குங்கள், இறந்தவரை உயிர் பெற்றெழச்செய்யுங்கள், தொழுநோயாளரை நலமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள' (மத் 10:8) என்கிறார். எனவே, இறையரசு வெறும் வார்த்தை (போதனை)யால் வருவதல்ல, மாறாக செயல்பாட்டால், துயர் துடைக்கும் மலர்வது என்பதும், அதை செயல்படுத்த திருத்தூதர் போல பலர் அழைக்கப்படவும் (10:1-4) அனுப்பப்படவும் (10:5-15) துன்பங்களின் மத்தியில் (10:16-25) அஞ்சாது (10:26-31) பணி செய்து இயேசுவின் சாட்சிகளாய் (10:32-42) இருக்கவும் நல்மனம் கொண்டோர் இன்று தேவை என்பதும் தெளிவாகிறது. எனவே இறையரசு இயேசுவின் கொடை மட்டுமல்ல நமக்களிக்கப்பட்ட உரிய பொறுப்பும் ஆகும்.

**விண்ணரசின் வருகை (நிறைவுக்கால பொழிவு அதி 24, 25)**

கிறிஸ்துவின் ஆட்சி ' உண்மையின் ஆட்சி, வாழ்வின் ஆட்சி, தூய்மையின் ஆட்சி, அருளின் ஆட்சி, நீதியின் ஆட்சி, அன்பின் ஆட்சி, அமைதியின் ஆட்சி. அந்த ஆட்சி ஏற்கனவே இம்மண்ணில் மறைபொருளாக உள்ளது. ஆண்டவர் மீண்டும் வரும் பொழுது அது தன் முழுமையை அடையும்' என்கிறது 2ஆம் வத்திக்கான் சங்கம். (இன்றைய உலகில் திருச்சபை 39). மத்தேயு நற்செய்தியின் பின்னணியில் சொல்ல வேண்டுமானால் இயேசுவால் துவங்கப்பட்டு இவ்வுலகில் ஊன்றப்பட்ட இறையாட்சி (அதி 12 - 25), திருத்தூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட ஆட்சி, இன்று திருச்சபையால் அறிவிக்கப்பட்டு, நிறுவப்படும் ஆட்சி தன் நிறைவை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறது.

லூக்கா நற்செய்தியின் பல பகுதிகள் இறையரசு ஏற்கனவே வந்துவிட்டது. அது இங்கே இப்போதே இருக்கிறது எனும் கருத்தை வலியுறுத்த (லூக் 10:9, 11: 11:20, 17:21, 21:31) இறையரசு ' இன்னும் (முழுமையாக) இல்லை' என்னும் கருத்தை இவ்விரு அதிகாரங்களில் (24, 25) வலியுறுத்துகின்றது மத்தேயு நற்செய்தி.

இவற்றை விளக்க அக்கால யூதமக்களுக்கு மிகவும் அறிமுகமான 'திருவெளிப்பாடு' என்னும் வெளிப்பாட்டு இலக்கிய நடையை பயன்படுத்துகின்றார் மத்தேயு. எனவே, வரவிருக்கும் அழிவும் (24:1-8, 36-44, 25:31-46) மானிட மகனின் வருகையும் (24 : 29 -31) அச்சமூட்டும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளது. அடுத்து வருகின்ற உவமைகள் (அத்திமர உவமை24:32-35; நம்பிக்கைக்குரிய பணியாள் 24:45-51; மணமகளின் தோழியர் உவமை 25: 1-13; தாலந்து உவமை 25: 14-30) அந்நாளை சந்திக்க மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவர்களின் மனநிலை எப்படி இருக்க வேண்டுமெனவும் விவரிக்கின்றன. 'ஏற்கனவே' (Already) அல்லது 'இன்னும் (முழுமையாக) இல்லை' (Not Yet) என்பவற்றில் எதாவது ஒன்றிற்கு அதிக அழுத்தம் கொடுத்தால் அது சில தவறான முடிவுகளுக்கு நம்மை இட்டுச் சென்று விடும்.

தொடரும்........ நன்றி - விவிலிய விருந்து

# விவிலியத்தில் குடும்பம்

சென்ற இதழின் தொடர்ச்சி....

## அந்த இன்ப வனமா இன்று துன்ப மயம்?


### " தாயையும் தந்தையையும் தவிக்கும்படி விட்டு விட்டுத் தனிக்குடித்தனம் அமைப்பதா? "

ஆக, மேற்சொன்ன, முப்பெரும் நுணுக்கங்களையெல்லாம் உள்ளடக்கிய வாசகமாய் நோக்கின், கணவன் மனைவி உறவு ஒருவரை ஒருவர் நிறைவாக்கம் செய்கின்ற ஆள்நிலை ஒன்றிப்பு! அது ஆன்மீக ஒன்றிப்பு மேலும் இறையியல்பை ஓரளவாவது வெளிப்படுத்தக்கூடிய விதத்திலே வாழந்து காட்டப்பட வேண்டிய கடமையை உணர்த்தும் ஒன்றிப்புறவு என்பது தெளிவு ஆயின் திருமண உறவை முறிவுபடுத்தும் எந்த ஏதுக்களுக்கும் இடம்கொடுக்கலாகாது! புறத்திலிருந்து எந்தத் தலையீடோ, குறுக்கீடோ அவ்வுறவை குலைத்து விட அனுமதிக்கலாகாது. உண்மையான தற்கையளிப்பைத் தந்து முழுமையான அன்பைக் காட்டி, வாழ்நாள் முழுவதும் நிலைத்து வாழ வேண்டும் எனும் நோக்கத்தில்தான் தொடக்கநூல் 2:24 புரிந்து கொள்ளப்பட வேண்டிய இறைவாக்கு!

ஆயின், தன் தந்தையையும் தாயையும் தவிக்க விட்டு விட்டுத் தான்தோன்றித் தனமாகத், தம் சொந்த விருப்பு வெறுப்புக்களால் வாழ்ந்து விடலாம் என்று இன்றைய இளஞ்சிட்டுக்கள் நினைத்தால் அது தவறா சரியா என அவர்களே சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கட்டும்.

குளுகுளுப்பான கோடை காலக் களிப்பகங்கள்! மனதைக் கவரும் மலைச்சாரல்கள்! மரம் செடி கொடிகள்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நீர்விழ்ச்சிக் காட்சிகள்! வானத்தை தொட்டு மகிழும் தேக்கு மரக் காடுகள்! இத்தகுக் கூறுகளைக் கொண்டதும் குளுமை நிறைந்ததுமான கொடைக்கானல், ஊட்டி போன்ற குளிர்த்தலங்களைத்தான் தேன் நிலவுக்காக தேர்ந்தெடுத்து, புதுமணத் தம்பதியரை அனுப்பிவைக்கிறோம். காரணம், வெயிலின் வெப்பக்கனலில் அவர்கள் வெம்பி விடக் கூடாது, குளுகுளுச் சூழலில் அவர்கள் கூடி மகிழ்ந்து, ஒருவரை ஒருவர் முழுமையாய் அறிந்து, ஒன்றிப்பின் உச்சியைத் தொட்டு, ஒத்திசைந்து வாழக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமையும் என்பதற்காக!

இது போன்ற காரணத்தால்தானோ என்னவோ, இறைவனும் தான் படைத்த முதல் மணத் தம்பதியரை 'ஏதேன் தோட்டத்தில் வைத்தார்' என விவிலியம் கூறுகிறது. (தொ.நூ 2:8) ஏதேன் என்றாலே 'ஏடேன்' எனும் எபிரேயச் சொல்லோடு இணைத்து, 'இன்பம்', 'மகிழ்வு', 'சுகம்' எனும் பொருள் கொடுக்கின்றனர் விவிலிய வல்லுனர்கள். ஆம், அந்தத் தோட்டம் இன்பம் தரும் தோட்டமாய் இருந்ததில் எள்ளளவும் ஐயமில்லை! சுற்றிலும் வேலி அமைக்கப்பட்ட பாதுகாப்பான வனம்! பல வகை மரம் செடி கொடிகள்! வண்ண வண்ண பூக்கள்!, மலைச்சரிவுகள். குன்றுகள் எல்லாமே பசுமையால் போர்த்தப்பட்டிருந்தன. இதயத்திற்கு இதமான காற்று, வற்றாத நீரூற்றுக்கள்! நாலா பக்கமும் பாய்ந்தோடும் ஜீவ நதிகள்! 'கண்ணுக்கு அழகானதும், உணவுக்கு சுவையானதுமான கனிமரங்கள்! பசும் பொன் கலந்த பள்ளத்தாக்குகள்! [illegible]



வண்ண மணிக் கற்கள் [illegible] வனப்பகுதிகள்! இப்படியெல்லாம் புலன்களுக்குப் பொலிவூட்டும் புவியழகு ஒருபுறம் இருக்க, அந்த வனத்திலே வசித்த காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும். அடக்கி ஆளும் [illegible] அக்குடும்பத்திற்கு அருளப்பட்டிருந்தது. (தொ.நூ 1: 28-30, 2:19-20).

இத்துணை இனிமை மிகும் தேன்நிலவுப் பரிசை 'இனாமாக' விசி எறிய விரும்பவில்லை கடவுள்! தெளிந்து தேர்ந்து கொள்ளும் தானுமை (Individuality) மற்றும் 'தன்னுரிமை' (Freedom) பெற்ற மானுடர் அதைத் தாமாக தெரிவு செய்து ஈட்டுக்கொள்ள வேண்டுமென்று திருவுளமானார் தேவன்! எழில் மிகுந்த அந்த ஏதேன் தோட்டத்தை அவர்களாகவே, அவர்கள் தம் சுய முயற்சியால் உருவாக்கவில்லை என்பதை உணர்ந்திருப்பார்களா என்று கடவுள் அறிய விரும்பினார் போலும்! இறைவனால் தரப்பட்டது தான் அந்த இன்பவனம் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவருக்கு முதன்மைநிலை தந்து. அவரையே முன்னிறுத்தித் தம் மணவாழ்வை வாழ்வார்களா? என்பதை சோதித்துப் பார்க்க எண்ணினார் இறைவன். படைப்பு அனைத்தையும் ஆள்கின்ற அவர்களது ஆட்சியுரிமை அளவற்றதுமல்ல. அவர்களது சொந்தத் திறனால் விளைந்ததுமில்லை எனும் நிஜத்தை ஏற்றுக் கொள்பவர்களா என்பதைச் சோதித்துப் பார்த்து, அதன் பிறகே அந்தப் பரிசை அவர்களுக்கு அளிப்பது முறை எனத் திருவுளங்கொண்டார் கடவுள்!

அந்த இன்பவனச் சோலையும் சரி, அதிலிருந்த அனைத்து உயிரினங்களும் சரி: அவையெல்லாம் இறைவனது உடைமைகளே.....

தொடரும் .............

நன்றி - விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

கிறிஸ்டி முருகுப்பிள்ளை

தொடர்ச்சி ......

திரு. மரிய மிக்கேல் அவர்களின் பஜனையுடன் கருத்தரங்கு ஆரம்பமாகியது. பெங்களூரு தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் இயக்குனர் அருட்பணி. சகாயநேசன் தமது தலைமையுரையை தனது கோவைத் தமிழில் அழகாக நிகழ்த்தினார். " இம்முறை தமிழ் நாட்டிலிருந்து 23 பேரும் சிறிலங்காவிலிருந்து நான்கு பேரும் பங்கு பற்ற வந்திருக்காபல... ஜனவரி மாதம் அடிப்படைப் பயிற்சிக்கு வந்தவர்களுக்கு இப்பயிற்சி இலகுவாக அமையுமுங்க...சிறிலங்கா சகோதரர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்கணுமில்ல.. வழிகாட்டிகள் அப்பயிற்சியை செய்யனுமுன்னு வேண்டுகிறனுல்ல." என்று ஆரம்பித்து கருத்தரங்கின் நோக்கங்களை விபரித்தார். தொடர்ந்து அருட்பணி லூயிஸ் சுவாமிகள் இறையரசு பற்றியும் இறையனுபவம் பற்றியும் தனது பாணியில் விளக்கமளித்தார். அவரது உரையில் மேலதிக விளக்கங்களை செருக முற்பட்ட தமிழ்நாட்டு அன்பர்களை உடனுக்குடன் " நீ சும்மா கெட.., அதக் குப்பையில போடு.., உன் கருத்த யார் கேட்டழுதா.., கம்முன கெட..டேய் சகாயராசு..வாய வச்சித்து சும்மா இருக்க மாட்டியா.. ஏய் ராணியம்மா உனக்கிட்ட யாரு கருத்துக்கேட்டா.. வந்துத் தாளுவ.." என்றெல்லாம் அடிக்கடி பங்கு பற்றுனர்களை கலாய்க்கத் தவறவில்லை.



வழிப்படுத்துனர்களின் சுய அறிமுகத்தைத் தொடர்ந்து பங்குபற்றுனர்கள் தம்மை அறிமுகப்படுத்தினர். இலங்கைத் தமிழில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் மீளக் கூறிய பின் தான் அவர்களுக்கு விளங்கியது.

இலங்கைத் தமிழ் அதுவும் திருகோணமலைத் தமிழ் " அழகு தமிழ்" என்பதை அவர்களே ஏற்றுக் கொண்டனர். எங்கள் நால்வரையும் பரிவுடனும் தோழமையுடனும் ஏற்றுக் கொண்டு பழகியமை சிறப்பாக இருந்தது.

தேனீர் இடைவேளையில் ஆண்கள் தங்கியிருந்த " அருணோதயா" விற்கு முன் புறம் திறந்த வெளியில் ரீ, பிஸ்கட் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் பக்கற் பால்மாவை ஒரு போதும் பயன்படுத்தவில்லை. பசும் பாலையே பயன்படுத்தினர். தினமும் வெவ்வேறு வகையான சிற்றுண்டிகளை வைத்திருந்தனர். பிஸ்கட், பாயாசம், பொரி கடலை, வடை, கேசரி என்று பற்பல. அங்கேயும் பாவித்த உபகரணங்களை விம் போட்டுக் கழுவி துணியால் துடைத்து ஒழுங்காய் அடுக்கும் முறை தொடர்ந்தது.

அடுத்த அமர்வில் திரு. பொன் அல்போன்ஸ் அவர்கள் சில விதிமுறைகளை எடுத்துக் கூறினார். நேரம் தவறாமை, ஒழுங்கு, அமைதி பேணல் மற்றும் " சிநேகாலயாவில்" குழுக்களாகப் பிரிந்து ஆற்றப்பட வேண்டிய ஒழுங்குகள் பற்றியும் விளக்கினார். ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டோம்.



" சிநேகாலயா" வைச் சுத்தப்படுத்துவது, காய்கறிகளை நறுக்க உதவி செய்வது போன்ற பணிகளை முறைப்படி செய்து முடிக்க வேண்டும்.

எப்போதாவது ஒரு தடவை சாம்பார் சாப்பிட்ட எமக்கு மூவேளையும் சாம்பார் கிடைத்தது. ஆனால் செல்வி. ஜெபமணிக்கு ஒரு பிரச்சனை.. அவருக்கு கத்தரிக்காய், தக்காளி என்றாலே அலர்ஜி.. இரவில் சோறு சாப்பிடப் பிடிக்காது. ஆனால் அவரே இலங்கையிலிருந்து சில்லி பேஸ்ட், அச்சாறு கொண்டு வந்ததினால் சமாளித்துக் கொண்டார். இரவில் சப்பாத்தி அல்லது பானை கேட்டுப் பெற்றுக் கொண்டார். " சிநேகாலயா" வைச் சுத்தப்படுத்துவது, காய்கறிகளை நறுக்க உதவி செய்வது போன்ற பணிகளை முறைப்படி செய்து முடிக்க வேண்டும்.

எப்போதாவது ஒரு தடவை சாம்பார் சாப்பிட்ட எமக்கு மூவேளையும் சாம்பார் கிடைத்தது. ஆனால் செல்வி. ஜெபமணிக்கு ஒரு பிரச்சனை.. அவருக்கு கத்தரிக்காய், தக்காளி என்றாலே அலர்ஜி.. இரவில் சோறு சாப்பிடப் பிடிக்காது. ஆனால் அவரே இலங்கையிலிருந்து சில்லி பேஸ்ட், அச்சாறு கொண்டு வந்ததினால் சமாளித்துக் கொண்டார். இரவில் சப்பாத்தி அல்லது பானை கேட்டுப் பெற்றுக் கொண்டார்.



கருத்தரங்கின் இறுக்கத்தைத் தணிக்க லூயில் சுவாமிகள் " ஏய்.. சகாயராசு ஒரு பாட்டுப்பாடு.." என்பார். அதற்காகவே கருத்தரங்கிற்கு வந்தது போல் திருச்சி சகாயராஜ் அற்புதமான பாடல்களைப் பாடுவார்.

" ஏம்மா.. அமலீ.. நீ சேல உடுத்தமாட்டியா..ஆ..ஒரு பாட்டுப்பாடு..அதற்கு ஒரு நாட்டியமும் ஆடு.." மறுக்க முடியாது மறுக்கவும் மாட்டார்கள்.ஆடி விடுவாள். அமலி தன் கருத்தரங்கில் "சின்னப்" பிள்ளை...வயதிலிலை உருவத்தில் இரண்டு பிள்ளைகளின் தாய். ஈரோட்டைச் சேர்ந்தவர். சிரித்தமுகம்.. அனைவருடனும் அன்பாகப் பழகுவார். இவ்வாறான மிகவும் ஆழமான விடயங்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தாமல் லூயிஸ் சுவாமிகள் இடைச் செருகல்களைச் செருகி கருத்தரங்கைத் தொய்வில்லாமல் வழிநடத்தினார்.

" கடவுள் கொடுத்த மாபெரும் அடையாளம் மனித உருவம் எடுத்த இயேசுவே. இது தான் எமது நம்பிக்கையின் அளவுகோல். நிரந்தரமானதும் இன்றைய அளவு கோலும் உயிர்த்த இயேசுவே. உயிர்த்த ஆண்டவராலேயே கிறிஸ்தவ விசுவாசம் ஆரம்பித்தது. இதுவே ஆழமானதும் அடித்தளமானதும், இவர் ஆவியின் வடிவத்தில் எமக்குள் இருக்கிறார். இந்த உணர்வுகளை சிந்தனை, சொல், செயல் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி) என்ற நிலைகளினூடாகவே அடைய முடியும்" என்று விளக்கினார்.

மாலையில் வயது முதிர்ந்த பெண்கள்.. ஏன் ஆண்களும் தான்..மேல் மாடிக்குப் படியில் ஏற முடியாது என்பதால் "சாகரிகா" என்றழைக்கப்படும் வட்டவடிவமைக்கப்பட்ட கலையரங்கிற்கு கருத்தரங்கு மாற்றப்பட்டது.

தொடரும்...

# தூய யோசப்வாஸ் வாழ்வின் பாதையில் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி

சென்ற இதழ் தொடர்ச்சி .........

கண்டி மன்னனின் முன்னிலையில் இவரின் வீரமும்,தூய வாழ்வும் மன்னனையே மனம் மாற்ற வைத்தது.

ஞானப்பிரகாசரின் பணியில் பல எதிர்ப்புக்களை சந்தித்தார். சில ஊர்களில் அவர் கட்டிய ஆலயங்கள் எரிக்கப்பட்டன. நிலங்கள் உழப்பட்டன. ஒருமுறை பயணித்த காருக்கு கல்லெறியும் விழுந்தது. சாதியின் கோரத்தன்மையில் புது மாற்றத்தை கொணர்ந்தார். சமாதானத்தின் கருவியாகவிளங்கினார். இவரின் மொழியாற்றலினால் தர்க்க பிரசங்கியாக விசுவாசத்திற்கு எதிராக எழுந்த பிரச்சனைகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். சமயக்காப்பு முறையினை (Apologetically Method) பயன்படுத்தி சமயப்பணி செய்தார்.

கிறிஸ்தவப் படிப்பினைகள்:

தூய யோசப்வாஸ் அடிகளார் கொங்கணி மொழி பேசுபவராக இருந்தபோதும் இலங்கை மக்களின் தாய் மொழிகளான தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பணிபுரிந்தார். இலத்தின் மொழிப் பிரயோகம் இருந்த போதும் மக்களின் விசுவாசத்தைக் கட்டியெழுப்ப மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் போதித்தார். பல செபமாலைகள், திருப்புகழ்மாலைகள், பக்திச்செபங்கள் அனைத்தையும் தமிழ் சிங்கள மொழிகளில் மேற்கொண்டார். அறிவியலாளராகவும் சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் பணியையும் அவரின் மொழி பெயர்ப்பு, கிறிஸ்தவ இலக்கியங்களின் தோற்றத்திற்கும் அறிவுரையாளராகவும், உந்து சக்தியாகவும் திகழ்ந்தார். இவரின் காலப்பகுதியிலே இயேசுவின் திருப்பாடுகள் மாலை, வியாகுலப் பிரசங்கம், சத்தியவேதாகம சஸ்ஷேபம், சுவிஷேச விரிந்துரை போன்ற பல நூல்கள் தமிழிலும், மங்களகீதம் கிறஸ்தியானி ஆலயம், புத்தமுல போன்ற பல நூல்களை சிங்கள மொழியிலும் வடிவமைத்தார். மேலும் யோசப்வாஸ் அடிகளின் வாழ்க்கை குறிப்பினில் ஒரு முறை இறுதி மரண ஆசீரை தமிழ் மொழியில் வழங்கினார் எனும் சான்றை ஆண்டகை எட்மண்ட் பீரிஸ் அவர்கள் தன்னுடைய நூலில் கூறியுள்ளார். தூய யோசப்வாஸ் தன்னுடைய மரணப் படுக்கையிலே சிங்கள மொழியில் அறிவுரைகள் வழங்கினார் எனவும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இலத்தீன் மொழிப் பாவனையில் இருந்த காலப்பகுதியில் சொந்த மொழியில் இறைவனைபுகழவாய்ப்பினைத் தந்தவர் ஞானப்பிரகாசர். "எனது பூசைப்புத்தகம்" என்ற நூலை மொழி பெயர்த்து திருப்பலியை நிறைவேற்றினார். பல துண்டுப் புத்தகங்கள், செப நூல்கள் சமய வரலாற்று நூல்கள் என இவரின் ஆக்கங்களை பலவாறு வகைப்படுத்தலாம். மாபெரும் எழுத்தாளன் தேவதாயில் கொண்ட அளவுகடந்த பக்தியால் தேவதாய் பற்றி எழுதியவை பல. இசைஞானம் மிக்க அடிகளார் தேவதாய் பற்றி இயற்றிய இலத்தீன் இசையொட்டி ஆக்கிய கீதங்கள் பல, "மாதாவே துணை நீரே","வாழ்த்துவோம் மாதாவை" இன்றும் பலருடைய வழக்கத்தில் உள்ளன.

எனவே, இவ்வாறாக இலங்கை தேசத்தில் பணிபுரிந்த இவ்விருமகான்களும் எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய பொக்கிஷம் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. இலங்கையில் தமிழ் மொழியில் கிறிஸ்தவ விசுவாசம் திழைக்கவிழைந்தவர்கள் இப்பெரும் பணியாளர்கள் என்பது மெய்யே.

அருட் சகோ. எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,தேசிய குருமடம்
கண்டி

தொடரும்..........

# உறவுகள்

உறவுகள் இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. ஆதியில் ஆதாமைப் படைத்த இறைவன் கூட ஆதாமின் உறவிற்கு உறுதுணையாக ஏவாளைப் படைத்தார். அன்றிலிருந்த ஆரம்பமான உறவின் பெருமையை அறியாதவர் எவருமில்லை. ஏன் மிருகங்கள், பறவைகள் அனைத்திலும் அவர்களுக்கேற்ற உறவுகள் இருக்கின்றன. இவற்றில் மனித உறவு மேன்மையானது., தூய்மையானது. ஆனால் மனிதனாகப்பட்டவன் இதனை மதிப்பதிலலை. தாய், தந்தை என்ற உறவு, பெற்றோர் பிள்ளைகள் என்ற உறவு, மாமா மாமி என்ற உறவு, மச்சான், மச்சாள், சித்தப்பா, சித்தி, அண்ணா, அக்கா, தாத்தா, பாட்டி போன்ற உறவுகள் மிகப்பெறுமதிமிக்கவை.

வீடுகளில் நடைபெறும் ஒரு நல்ல, கெட்ட நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொண்டு சுக, துக்கங்களை விசாரிக்க வரும் உறவகளிடமிருந்து பெறும் ஆசீர்வாதங்களால் கிடைக்கும் சந்தோஷத்திற்கு ஈடில்லை. இதே போன்றே அயலவர், தூரத்து உறவினர்களது சமூகமளிப்பும் உறவிற்குப் பலமாகின்றது.

எதற்கும் நாம் சமுதாயத்தில் நல்ல ஒழுக்க சீலராக வாழ்ந்தால் உறவுகள் மேன்மையானதாக இருக்கம். மேலும் மிருகங்கள், பறவைகள் கூட காலை எழுந்தவுடன் பலவகைக்குரல்களினால் இசையை எழுப்பி தனது உறவுகளை அடையாளப்படுத்துகின்றன. ஆனால் இது போன்ற நிலை எமக்கு இருக்கின்றதா? இல்லையெனக் கூறலாம். உறவுகளுக்கிடையே ஏட்டிக்குப் போட்டி, பொறாமை, பகைமை எண்ணங்கள், உறவுகளைப் பாதிக்கும் நடத்தைகளைக் கொண்டுள்ளதால் எப்படி மனிதர் ஒற்றுமையுடன் வாழ்வர். சாதிப் பிரச்சினை, மதப்பிரச்சினைகளால் ஏற்படும் பிணக்குகள் உறவுகளைப் பாதிக்கும் செயலாகவேயுள்ளது.

இதற்கு அடிப்படைக் காரணம் புரிந்தணர்வின்மை, விட்டுக்கொடுப்பின்மை, மற்றவரை அடக்கியாளும் தன்மையேயாகும். அனைத்தும் தனக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம். இதனால் ஏற்படுவது அழிவுகளும், உயிரிழப்புக்களுமே. எங்கு பார்த்தாலம் மனித மாண்பு சிதைக்கப்படுவதை தினமும் அறியக்கூடியதாயுள்ளது. ஆகவே மனிதம் காக்கக்கப்பட வேண்டும். மனிதநேயம் வளர்க்கப்பட வேண்டும்.

இந்த உறவுகளைக் கொச்சப்படுத்தம் செயல்களைப் புரிபவர் நாட்டில் அதிகமாகிக் கொண்டே போகின்றது. இதனை நாளாந்தம் பத்திரிகைகள் மூலம் வாசிக்கின்றோம். என்ன கீழ்த்தரமான செயல்களைப் புரிபவர்கள் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ்கின்றார்கள். தந்தை. மகன், தாத்தா, பேத்தி இத போனற எத்தனை வெட்கக்கேடான செயல்களைப் புரியும் மக்களினால் இது போன்ற உறவுகள் கொச்சைப்படுத்தப்படுகின்றது. பாலியல் துஷ்பிரயோகங்கள் புரிவோரால் எத்தனை குடும்பங்கள் கண்ணீரும் கம்பலையுமாக, வெட்கமுமாக உள்ளார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு சட்டமூலம் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும்.

இது போன்ற நிலை மாறினால் எந்த உறவும் பாதிக்கப்படாது. நல்லதொரு சமுதாயம் உருவாகுமென்பது திண்ணம். எமக்கும் விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும் இருந்தால் சகல உறவுகளும் சிறப்பாக இருக்கும். எவரும் பயமின்றி நாட்டில் நடமாடுவர் என்று கூறிக்கொள்ளும்...............

ச. அந்தோனிப்பிள்ளை — அ.இ.ச.நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி சிறப்புப் போட்டி

## விவிலிய விடுகதைக்கு விடை காணுங்கள்
## நீதிமொழிகள் நூலிலிருந்து அதிகாரம் 1 - 20

❖விடையையும் அதிகாரம் வசனத்தையும் எழுதவும்
❖எல்லோரும் பங்குபற்றலாம்
❖போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
❖இப்படிவத்திலே எழுதி அனுப்பவும்

01. அங்கும் இங்கும் ஆடுவான் மேலும் கீழும் தள்ளுவான் அசையாமல் நிற்கும் போது கணக்கு சரி இல்லையானால் ஆண்டவருக்கு அருவருப்பு அது என்ன?
விடை : ..........................................

02. வீட்டையெல்லாம் பிரித்து வீதியிலே வைப்பான் அவன் யார்?
விடை : ..........................................

03. குருவி போல பறந்தவன் காளை மாட்டைப் போல நடந்தவன் அம்பினால் அடிபட்டு அங்கே அழிந்தவன் அவன் யார்?
விடை : ..........................................

04. கடன் அன்பை முறிக்கும் என்று, கடன் கொடுக்கத் தயங்கும் போது, ஆண்டவருக்கு கடன் கொடுப்பான், கனிவு நிறைந்த மனிதன் இவன். அவன் யார்?
விடை : ..........................................

05. அகல உழுகிறதை விட ஆழ உழனும், அகலவும் உழ மாட்டான், ஆழவும் உழமாட்டான், ஆனால் அறுப்பில் வந்து பிச்சை கேட்பான். அழுது கொண்டே திரும்புவான். அவன் யார்?
விடை : ..........................................

06. வா என்று கூப்பிடும், வந்தால் அணைத்திடும், வாழ்க்கையில் உயர்ந்திட வழிகளைச் சொல்லிடும். அது என்ன?
விடை : ..........................................

07. கையின் மேல் தலை. உடலின் மேல் வறுமை. அவன் யார்?
விடை : ..........................................

08. உயிர் உண்டு. உடல் இல்லை. பாதை உண்டு. பள்ளம் இல்லை. மார்க்கம் உண்டு. மரணம் இல்லை. இவ் வழி சென்றால் எவ்வழியும் தேவையில்லை. அது எவ்வழி?
விடை : ..........................................

09. டமார் டுமீர் இடி வீட்டிற்குள் இடிக்க சரசரவென மழை கூரையில பெய்ய சொட்டு சொட்டாய் தண்ணீர் ஓயாமல் ஒழுகியது. அது என்ன?
விடை : ..........................................

10. பிரதமரை பார்க்கனுமா? பிரசிடன்டை பார்க்கனுமா? முதலமைச்சரைப் பார்க்கனுமா? முக்கியமானவரைப் பார்க்கனுமா? பாதையில்லா இடத்திலே பாதைகளை ஏற்படுத்தும் சூப்பரான ஆயுதம். அது என்ன?
விடை : ..........................................


பெயர் : ..........................................
முகவரி : ..........................................
பங்கு : ..........................................

முடிவுத்திகதி 25.10.2017

✂ ..........................................

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

☞ **பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.**
☞ **திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது**
☞ **1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**
☞ **1ம் பரிசு - 500/=, 2ம் பரிசு - 300/= , 3ம் பரிசு - 200/=**



பெயர் ..........................................
முகவரி ..........................................
பங்கு ..........................................
தரம் ..........................................
முடிவுத் திகதி 25.10.2017

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 24
## முடிவுகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | ■ | வி | லை | கொ | டு | த் | து | ■ | ல் |
| ம் | தி | ■ | க | ட் | டா | ய | ம் | ■ | ளி |
| உ | ரா | ம | ■ | வெ | ற் | றி | ■ | ள் | நா |
| ண் | ட் | று | சு | ■ | கு | ங் | ப | க | ன் |
| ணு | சை | ம | ரி | ம | ண | மா | ன | பு | ரி |
| ம் | த் | ண | ப | ரி | த | கோ | ச | ப் | வ |
| உ | தோ | ம் | ■ | ஏ | மா | ந் | து | று | ட |
| ண | ட் | ■ | அ | ரு | ள் | கொ | டை | உ | ண் |
| வு | ட | ■ | மை | ரி | வு | ன் | த | ■ | ஆ |
| ■ | ம் | வி | ரு | த் | த | சே | த | ன | ம் |

01. ஆண்டவரின் நாளில்
02. உறுப்புகள்
03. விலை கொடுத்து
04. மறுமணம்
05. விருத்தசேதனம்
06. நாம் உண்ணும் உணவு
07. தன்னரிமை
08. திராட்சைத் தோட்டம்
09. கட்டாயம்
10. பரிசு
11. வெற்றி
12. சகோதரி
13. ஏமாந்து
14. அருள்கொடை
15. பங்கு
16. மணமான



**பங்குபற்றியோர் – 34 பேர்**
**சரியான விடையளித்தோர் – 24 பேர்**

### பரிசுக்குரியவர்கள்


**1ம் பரிசு**
செல்வி பியூலா டானியலா
21/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

**2ம் பரிசு**
M.S. தனராஜா
இல : 427, அன்புவழிபுரம்,
திருகோணமலை

**3ம் பரிசு**
செல்வி.ஏ. விமல்சியா,
3ம் வட்டாரம்,
நிலாவெளி


### பாராட்டுக்குரியவர்கள்

01. அ.யேசுதாசன் ~ அன்புவழிபுரம்
02. க.கீதாலோஜினி ~ மூதூர்
03. றொ. எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்
04. வேஜின் டி குரூஸ் ~ அன்புவழிபுரம்
05. சு.சுவேகா ~ பாலையூற்று
06. சு. கௌசல்யா ~ பாலையூற்று
07. T. யூலிசெஸ் ~ பள்ளத்தோட்டம்
08. தே. சமில்டன் ~ நிலாவெளி
09. A. கிறிஸ்டியன் றோசினி ~ பாலையூற்று
10. ஆன் வஜிரா ~ பேராலயம்



11. த.அபிஷா ~ சாம்பல்தீவு
12. அருண் ரிசாந்தன் ~ நிலாவெளி
13. கு. டிலஷன் ~ பாலையூற்று
14. மை. றிஷேலி ~ குவர்ஹூப்பே
15. ஜீ. செபானா ஆன் ~ கன்னியா
16. யே. தம்மிக்கா ~ அன்புவழிபரம்
17. யே.டிவேஞ்சன் ~ அன்புவழிபரம்
18. அ.வலண்டினா ~ பாலையூற்று
19. அ. கரோலினி கிறீப்திக்கா ~ பேராலயம்
20. சு. அப்சரா நிவேதி ~நிலாவெளி
21. டொ. கிருசாந்தன் ~ மூதூர்

## வெற்றியைக் காணவே........ முடிவுகள்



முன்வைத்த காலை பின்வைக்காது
நல்லதைக் கண்டடைய
நாம் காணும் துயரங்கள்
பல்கிப் பெருகுமானால்
மனம் சோர்ந்து பின்வாங்காமல்
முன்னேறும் போது வாழ்வில்
வெற்றியைக் காண்பது உறுதியே

1ம் பரிசு 500/- ரூபா
க. அனுசலியா,
இல : 201/13, இலிங்கநகர்,
திருகோணமலை

பங்குபற்றியோர் ~ 50 பேர்
சரியாக வடிவமைத்தவர் ~ ஒருவர் மாத்திரமே

## இருசொற்போட்டி முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1.இருமுதுகுரவர் | I. தாய் | II. தந்தை |
| 2.இருவகைப்பற்று | I. அகப்பற்று | II. புறப்பற்று |
| 3.இருவகை அறம் | I. இல்லறம் | II. துறவறம் |
| 4.இருபிறை | I. வளர்பிறை | II. தேய்பிறை |
| 5.இருநிதி | I. சங்குநிதி | II. பதுமநிதி |
| 6.இரு கனவு | I. பகல்கனவு | II. இராக்கனவு |
| 7.இருசுடர் | I. சந்திரன் | II. சூரியன் |
| 8.இருமை | I. இம்மை | II. மறுமை |
| 9.இருவினை | I. நல்வினை | II. தீவினை |
| 10.இருமரபு | I. தாய் மரபு | II. தந்தை மரபு |

## இறைவார்த்தைப் புதையல் போட்டி முடிவுகள்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/- ரூபா
க. சுகந்தினி
சந்தை வீதி
மூதூர் - 07

2ம் பரிசு 300/- ரூபா
அ. மிதுஷா,
இல: 25/38, வேளாங்கன்னி வீதி,
பள்ளத்தோட்டம்,
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபா
ஆன் நதுஷிக்கா,
இல : 92, அஞ்சலக வீதி,
திருகோணமலை



பங்குபற்றியவர்கள் - 20 பேர்
சரியான விடையளித்தார் - 03 பேர்
1ம் இடத்தை இருவர் பெற்றுக் கொள்வதால் பரிசுத்தொகை சமமாக பிரித்து வழங்கப்படுகின்றது.

1ம் இடம்
மேரி கொலின் அன்ரனி யேசுதாசன்
இல : 432, அன்புவழிபுரம்.
திருகோணமலை

1ம் இடம்
சவரியன் அன்ரனி யேசுதாசன்
இல : 432, அன்புவழிபுரம்.
திருகோணமலை

3ம் இடம்
தே.சமில்டன்
3ம் வட்டாரம்,நிலாவெளி

பங்குபற்றிய அனைவருக்கும்
வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைநாள் ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கௌரவ கிரிக்கட் சுற்றுப்போட்டி





நற்செய்திக்கு சான்று பகர்ந்து, தூய யோசேப் வாஸ் அடிகளாரின்
கனவினை நனவாக்குவோம்

### தேசிய தூய யோசேப் வாஸ் தினம்

காலை 11.00 மணிக்கு கண்காட்சி ஆரம்பம்
மாலை 5.00 மணிக்கு விசேட உரை
இரவு 8.00 மணி முதல் ஞாயிறு அதிகாலை 5.00 மணி வரை திருவிழிப்பு ஆராதனை



04.11.2017 சனிக்கிழமை
வஹாக்கோட்டை தூய அந்தோனியார்
தேசிய திருத்தலத்தில் நடைபெறும்

**உங்கள் அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம் !**

தகவல் : பொதுநிலையினர், ஆலைக்குழு

## குருத்துவப்பணிவாழ்வின் பாதையில் 15 வருடங்கள்...






## திருகோணமலை மறைமாவட்டத்தில் விவிலியக் கண்காட்சி - 2017













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். (லூக் 11: 09)